வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 15.12.2023 வெள்ளிக்கிழமை இதழ் : 347 பக்கங்கள் : 12

## கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி

# பகுப்பாய்வு நடவடிக்கைகள் 21,22இல் யாழ்ப்பாணத்தில்!

முல்லைத்தீவு, டிசெம்பர் 15

**கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியிலிருந்து மீட்கப்பட்ட மனித எச்சங்கள் தொடர்பான பகுப்பாய்வு எதிர்வரும் 21மற்றும் 22ஆம் நாட்களில் யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்படவுள்ளது என்று சட்ட மருத்துவ அதிகாரி வாசுதேவ நீதிமன்றத்துக்கு தெரிவித்துள்ளார்.**

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி தொடர்பான வழக்கு விசாரணைகள் முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் நேற்று நடைபெற்றது.

இதுவரை நடைபெற்ற அகழ்வு பணிகளின் போது

11



## வடக்கு, கிழக்கில் இன்று முதல் பெருமழை பெய்வதற்கு வாய்ப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 15

வடக்கு, கிழக்கு மாகாணத்தில் இன்று வெள்ளிக்கிழமை முதல் பெருமழை கிடைப்பதற்கு வாய்ப்புள்ளது என்று யாழ். பல்கலைக்கழகத்தின் புவியியல் துறையின் மூத்த விரிவுரையாளர் கலாநிதி நா. பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள குறிப்பில்,

வங்காள விரிகுடாவில் இலங்கைக்கு தென்கிழக்கே வெள்ளிக்கிழமை (இன்று) காற்றுச் சுழற்சி உருவாகுகின்றது. இதனால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் கனமானது முதல் மிகக் கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

இக் காற்றுச் சுழற்சி வடக்கு, வடமேற்கு திசை நோக்கி நகரும் வாய்ப்புள்ளது. எனினும், இதன் நகர்வுப் பாதை தொடர்பில் நாளைய தினத்துக்கு பின்னரே உறுதியாக கூற முடியும். இந்தக் காற்று சுழற்சி காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உட்பட்ட நாட்டின் பல

11

## மகிந்தவிடமிருந்து இன்று மக்களுக்கு முக்கிய செய்தி!

### சொல்கிறார் ரோஹித அபேகுணவர்த்தன

கொழும்பு, டிசெ. 15

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாட்டு மக்களுக்கு முக்கிய அறிவிப்பை இன்று வெள்ளிக்கிழமை வெளியிடுவார் என்று ஆளும் தரப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்தார்.

களுத்துறையில் நேற்று நடந்த மக்கள் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அரசியல் ரீதியில் தோற்றுவித்த நெருக்கடிகளால் பெரும் பாதிப்புகளை எதிர்கொண்டோம். அரசமைப் பின் ஊடாக தீர்வு கண்டுள்ளோம்.

11

## கைபேசிகளின் விலை உயரும்!

கொழும்பு,டிசெ. 15

நாட்டில் பெறுமதி சேர் (வற்) வரி 18 சத வீதமாக அதிகரிக்கப்பட்ட பின்னர் கைபேசிகள், கைபேசி பாகங்களின் விலைகள் அதிகரிக்கப்படும் என்று இலங்கை கைபேசி விற்பனை நிலைய உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

11

### கீரிமலை ஜனாதிபதி மாளிகை;

## நகர அதிகார சபைக்காக வழங்க இன்று அளவீடு செய்யப்படுகிறது

யாழ்ப்பாணம், டிசெ. 15

கீரிமலையில் அமைக்கப்பட்டுள்ள ஜனாதிபதி மாளிகை நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளிக்கப்படவுள்ளது. இதற்காக ஜனாதிபதி மாளிகை வளாகம் இன்று வெள்ளிக்கிழமை அளவீடு செய்யப்படவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. நில அளவை திணைக்களத்தின் நில அளவையாளர் செ. லத்தீபன் இதற்கான பகிரங்க அறிவித்தலை வெளியிட்டுள்ளார்.

இதன்படி, தெல்லிப்பழை பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள நகுலேஸ்வரம் (ஜே -226), காங்கேசன்துறை (ஜே -233) கிராம சேவகர் பிரிவுகளில் 29 ஏக்கர் நிலம் அளவீடு செய்யப்படவுள்ளது.

ஆழ்வான்மலையடி, வேலர்காடு, புண்ணன் புதுக்காடு, பத்திராயான், புதுக் காடு, சோலை

11

## எரிவாயுவின் விலை 640 ரூபாயால் உயரும்

கொழும்பு, டிசெ. 15

எதிர்வரும் ஜனவரி முதல் எரிவாயுவின் விலை அதிகரிக்கப்படவுள்ளது என்று லிட்ரோ எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது.

லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் இது தொடர்பில் தகவல் வெளியிடுகையில்,

பெறுமதி சேர் வரியின் அதிகரிப்பு காரணமாக தயக்கத்துடன் விலை அதிகரிப்பு முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இதன்படி, எரிவாயுவின் விலை 18 வீதத்தால் அதிகரிக்கப்படும். இதன்படி,

11



### 5 கோரிக்கைகளை முன்வைத்து

## யாழ். கடற்றொழிலாளர்கள் கையெழுத்துப் போராட்டம்!

யாழ்ப்பாணம், டிசெ. 15

ஐந்து அம்ச கோரிக்கைகளை முன்வைத்து யாழ்ப்பாண கடற்றொழிலாளர் அமைப்பின் பிரதிநிதிகள் கையெழுத்து போராட்டத்தை நேற்று ஆரம்பித்துள்ளனர்.

“இலங்கை கடற்றொழிலாளர்களின் நிலைப்பாடு” என்ற தலைப்பின் கீழ் கையெழுத்து போராட்டத்தை ஆரம்பித்தனர். இவ்வாறு

11

## சைவத்தின் சாபத்துக்கு எவரும் ஆளாகாதீர்கள்!

### ஆறு. திருமுருகன் கோரிக்கை

கொழும்பு, டிசெ. 15

கீரிமலையில் ஜனாதிபதி மாளிகையை அண்டியுள்ள சைவ சமய அடையாள இடங்களை விடுவிக்காமல் தனியார் பல்கலைக்கழகம் என்ற பெயரில் வழங்க முற்பட்டால் அதனை பெற்று சைவ சமயத்தின் சாபத்துக்கு ஆளாக எவரும் விரும்பக்கூடாது என்று தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய தலைவர் ஆறு. திருமுருகன் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி மாளிகை நகர அபிவிருத்தி அதிகார சபைக்காக இன்று அளவீடு செய்யப்

11

## இரணைமடு குள தாழ்நில மக்களுக்கு எச்சரிக்கை!

கிளிநொச்சி, டிசெ. 15

இரணைமடு குளத்துக்கு வரும் தண்ணீரின் அளவு அதிகரித்துள்ளது. இதனால், இன்று வெள்ளிக்கிழமை அதிகாலை முதல் வான் கதவுகள் திறக்கப்படலாம். எனவே, தாழ்நிலப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் அவதானத்துடன் செயல்படுமாறும், கால்நடைகள், வாழ்வாதாரங் கள் தொடர்பிலும் அதிகம் கவனம் செலுத்துமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இரணைமடுக் குளத்தின் நீர் மட்டம் நேற்று காலை 30 அடி 11அங்குலமாக இருந்தது.

11

## இலங்கை வருகிறார் பிரிட்டன் இளவரசி!



கொழும்பு, டிசெ. 15

பிரிட்டனின் இளவரசி ஆன் எலிசபெத் எதிர்வரும் ஜனவரி மாதம் இலங்கை வரவுள்ளார் என்று வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

எதிர்வரும் ஜனவரி 10ஆம் திகதி முதல் 13ஆம் திகதி வரை இளவரசி ஆன் எலிசபெத் இலங்கையில் பல்வேறு நிகழ்வுகளில் கலந்துகொள்ளவுள்ளார்.

11

# இப்படியும் நடக்கிறது

இரண்டாயிரத்து பதினைந்தாம் ஆண்டு தேர்தலில் ஒருவர் சுயேச்சையாக தேர்தலில் போட்டியிடுவதற்காக நியமனப்பத்திரங்களை தாக்கல் செய்துவிட்டு கச்சேரிக்கு வெளியே வந்து சொன்னார், “அனைத்து இடங்களையும் நாங்கள்தான் கைப்பற்றுவோம். தற்போதைய அரசியல்வாதிகள் மீது மக்கள் கடும் கோபத்தில் இருக்கிறார்கள்”, என்று.

யுத்தம் முடிவடைந்த பின்னர் நாட்டுக்கு திரும்பி மக்களுக்கு நல்லது செய்யவேண்டும் என்ற விருப்பத்தில் அவர் தேர்தலில் போட்டியிடவேண்டும் என்று நினைத்தது தவறானது இல்லைத்தான்.

அதற்கு முன்னதாகவே பல்வேறு சமூகப் பணிகளையும் அவர் தொடங்கியிருந்தார்.

தனது சொந்தப் பணத்தில் அவ்வாறு ஓடிஓடி சமூகப் பணியாற்றிய அவர், அரசியலின் ஊடாகவும் எதையாவது செய்ய வேண்டும் என்று நினைத்தது நல்லதுதான்.

வேட்பு மனு தாக்கல் செய்த பின்னர், அவரை இந்த ஊர்க் குருவி சந்தித்தபோது, அவர் சொன்னார், “பத்து ‘சீற்’றும் எங்களுக்குத்தான்” என்று. எனக்கு புரியவில்லை. அவர் எதனை சொல்கிறார் என்று.

பொறி பறந்ததுபோல, அவர் எதனைச் சொல்கிறார் என்று பட்டது. அதாவது யாழ்ப்பாண மாவட்டத்தில் ஏழு ஆசனங்களுக்காக ஒரு கட்சியோ, சுயேச்சை குழுவோ வேட்புமனு தாக்கல் செய்யும்போது பத்து வேட்பாளர்களை பட்டியலில் சேர்த்திருக்க வேண்டும்.

அப்படி பத்து பெயர்களை தனது சுயேச்சை குழுவுக்காக தாக்கல் செய்தவர், யாழ்ப்பாணத்தில் பத்து எம். பிக்கள் என்று நினைத்துவிட்டார் என்பது புரிந்தது.

அவருக்கு நிலைமையை புரியவைத்த பின்னர்தான், அவர் அதனைக்கூட புரிந்துகொண்டார். ஆனாலும், அப்படி திருத்திய பின்னரும், “ஏழு இடங்களும் எங்களுக்குத்தான்”, என்றார்.

அவருடன் தர்க்கிக்க நான் விரும்பவில்லை.

அடிக்கடி தேர்தல் பிரசாரங்களில் பொதுவெளியில் அவரை சந்திக்கின்றபோதெல்லாம் மனுசன் அந்த நம்பிக்கையை குறையவிடவில்லை.

தனது தேர்தல் பிரசாரத்திற்காக தமிழகத்திலிருந்து ஒரு பிரபல இசைக்குழுவை அழைத்து, யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் மாபெரும் இசை நிகழ்ச்சியை நடத்தினார். அந்த இசை நிகழ்ச்சிதான் யுத்தம் முடிவடைந்த பின்னர் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற - தமிழக இசைக் கலைஞர்கள் பங்குபற்றிய முதலாவது நிகழ்ச்சி. அதில் ஒரு காலத்தில் மிகப்பிரபல்ய நகைச்சுவை நடிகராக இருந்த செந்திலும் கலந்துகொண்டாரென ஞாபகம்.

அவரின் அன்புதழுவிய அழைப்பை ஏற்று இந்த ஊர்க் குருவியும் இந்த இசைநிகழ்சிக்கு சென்றிருந்தேன். என்னைக் கண்டதும் மகிழ்ச்சியில் துள்ளிக்குதித்துக்கொண்டிருந்த அவர், ‘பார்த்தீர்களா சனக்கூட்டத்தை, நான் வெல்வது உறுதி என்று இப்போதாவது நம்புகின்றீர்களா?’ என்றார்.

அவருக்கு அப்போதும் தெரியவில்லை, வந்தவர்கள் எல்லாம் செந்திலையும் தமிழக இசைக்குழுவினரையும் பார்ப்பதற்காக வந்தவர்கள் என்பது.

தேர்தல் முடிவடைந்த பின்னர் அவர் இரண்டாயிரம் வாக்குகளைப் பெற்றிருந்தமை இந்த ஊர்க் குருவிக்கு பெரிய விடயமாகவே தெரிந்தது.

இதை இப்போது ஞாபகப் படுத்த காரணம் என்ன என்று நீங்கள் நினைக்கலாம். தேர்தலில் போட்டியிடுகின்ற அனைவருமே தாங்கள் வெல்வோம் என்று நினைத்துக் கொண்டுதான் போட்டியிடுவார்கள் என்பதை ஞாபகப்படுத்துவதற்காகவே.

இப்போது யாரைப் பார்த்தாலும் தேர்தலை நடத்துங்கள் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு காரணம் அப்படி நடந்தால் தாங்களே வெல்வோம் என்ற நம்பிக்கையில்தான். கடைசியாக இப்போது ஜனாதிபதிக்கு நெருக்கமாக இருக்கும் சில சிரேஷ்ட அமைச்சர்கள், ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக பொதுத் தேர்தலை நடத்துமாறு ஜனாதிபதிக்கு ஆலோசனை கூறியிருக்கின்றனர் என்றொரு செய்தி வந்ததும், அது பற்றி கொழும்பில் சில ஊடக- அரசியல் பிரமுகர்களுடன் கதைத்தபோது சில விடயங்கள் வெளிச்சத்துக்கு வந்தன.

ஒவ்வொரு கட்சியிலும் உள்ளவர்கள் தாங்களே வெல்வோம் என்று அளவுக்கதிகமான நம்பிக்கையில் இருக்கிறார்கள்.

இப்போது பாராளுமன்ற தேர்தல் ஒன்று நடந்தால்தான் அவர்களுக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கு எப்படி இருக்கின்றது என்பது தெரியவரும்.

அதாவது, யாருமே தனித்து அரசாங்கம் அமைக்கக்கூடிய அளவுக்குப் பெரும்பான்மையை பெறமாட்டார்கள். அப்படி பெற முடியாத போது, அடுத்து நடக்கும் ஜனாதிபதி தேர்தலிலும் தாங்கள் வெற்றிபெறமுடியாது என்பது தெரியவந்ததும் அவர்கள் வெற்றி பெறக்கூடிய வகையில் அணி சேர்வார்கள்.

முக்கியமாக சஜித் தரப்புக்கு, தமது வேட்பாளர் ஜனாதிபதியாக முடியாது என்பது தெரியவரும் அப்படி வந்தால், அவர் வேறு வழியின்றி ரணில் தரப்போடு இணையவேண்டிய நிலை வரும் என்று கணக்கு காட்டுகிறார்களாம் இந்த சிரேஷ்ட அமைச்சர்கள்.

எல்லோரும் சொல்வதுபோல ஜே. வி. பி. அதிக ஆசனங்களை எடுத்தாலும் அது தனித்து ஆட்சி அமைக்கமுடியாது. அவர்கள் யாருடனும் கூட்டுச் சேரப் போவதுமில்லை. அதேபோல சஜித் அதிக ஆசனங்களை எடுத்தாலும் தனித்து ஆட்சிய மைக்க முடியாது. அவ்வாறான நிலைமை வரும்போது வெற்றிக்கணக்கை கூட்டிக்கழித்து அணி சேர அது உதவும் என்பதால், இந்த பொதுத் தேர்தல் முதலில் என்ற யோசனை முன்வைக்கப்பட்டிருக்கிறதாம்.

ஆனாலும் இந்த யோசனையை ரணில் ஏற்றுக்கொள்வாரா என்பது தெரியவில்லை.

**- ஊர்க்குருவி.**

# கிரிக்கெட் ஒளிபரப்பால் கிடைக்க வேண்டிய 110 கோடி டொலர் வெளிநாட்டு வங்கிகளில்!

## ஜே. வி. பி. சொல்கிறது

கொழும்பு, டிசெ. 15

கிரிக்கெட் ஒளிபரப்பு மூலமாக இலங்கைக்கு கிடைக்க வேண்டிய பணத்தில் 110 கோடி அமெரிக்க டொலர் (நம் நாட்டு மதிப்பில் சுமார் 35 ஆயிரத்து 933 கோடி ரூபாய்) வெளிநாடுகளில் உள்ள வங்கி கணக்குகளில் வைப்பு செய்யப்பட்டுள்ளன - மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.

கிரிக்கெட் விளையாட்டில் போட்டிகளில் அதிகளவில் பணம் கிடைப்பதில்லை. போட்டிகளை ஒளிப்பரப்பும் உரிமை ஊடாகவே அதிகளவில் பணம் கிடைக்கிறது.

போட்டிகளில் வெற்றி பெற்றாலும் தோல்வியடைந்தாலும் ஒளிபரப்பு உரிமைக்கான முழுப்பணமும் செலுத்தப்படும். இந்த விதத்தில் இலங்கைக்கு கிடைக்க வேண்டிய பணத்தில் 110 கோடி அமெரிக்க டொலர் வெளிநாடுகளில் உள்ள வங்கி கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்டுள்ளன. அவை இலங்கையை சேர்ந்தவர்களுக்கு சொந்தமான வங்கிக் கணக்குகள்.

கோப் குழு இது தொடர்பாக தடயவியல் கணக்காய்வை நடத்தியது. இதற்கு முன்னர் பாராளுமன்றம் கலைக்கப்பட்டதால் கோப் குழுவும் கலைந்தது. தற்போது அந்த விசாரணைகள் திறந்தே உள்ளன.

இந்த நிலையில், அடுத்த ஜனாதிபதி தேர்தலின் பின்னர், ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் தலைமையின் கீழ் இது சம்பந்தமாக முழுமையான விசாரணை நடத்தப்படும் எனவும் சுனில் ஹந்துன்நெத்தி கூறினார். (ஐ)

# ஒட்டுசுட்டான் பண்பாட்டு பெருவிழாவில் 10 பேருக்கு பண்டாரவன்னியன் விருது!

முல்லைத்தீவு, டிசெ. 15

ஒட்டுசுட்டான் பிரதேச பண்பாட்டு பெருவிழாவில் துறை சார்ந்த பத்து பேர் பண்டாரவன்னியன் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலகமும் வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் ஒட்டுசுட்டான் பண்பாட்டு பேரவையும் இணைந்து ஏற்பாடு செய்த ஒட்டுசுட்டான் பிரதேச பண்பாட்டு பெருவிழா நேற்று முன்தினம் சிறப்பாக நடைபெற்றது.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் திருமதி பரமோதயன் ஜெயராணி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் கலைத்துறை வளர்ச்சிக்காக பங்களிப்பு நல்கிய துறை சார்ந்த பத்து பேருக்கு



பண்டாரவன்னியன் விருது வழங்கப்பட்டது.

செல்வி துரைராசா றஜிதா (இசைத் துறை), மாயவன்சாமி புஸ்பகுமார் (சிற்பம்), குலேந்திரன் யதுகுலன் (குறும்படம்), செல்வி எழிலகன் சதுர்மிலா நடனம்), சிவராசா சிவதீபன் (கலைத் துறை), செல்வி தனபாலராஜ் துளசிகா (ஓவியம்), சிவபாலசிங்கம் வாகீசன் (இலக்கியம்) தங்கராசா நிசாந்தன் (அறிவிப்புத் துறை) சின்னப்பு சின்னத்துரை (நாட்டுக்கூத்து), சண்முகம் தவசீலன் (ஊடகம்) ஆகியோருக்கே பண்டாரவன்னியன் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. (ஐ)

# முட்டைகள் இறக்குமதி 20 இலட்சத்தால் உயர்வு



கொழும்பு, டிசெ. 15

சதொச நிறுவனத்துக்கு இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் முட்டைகளின் எண்ணிக்கை நேற்று முன்தினம் முதல் 20 இலட்சமாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக அரச வர்த்தக கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஆசிறி வலிசுந்தர தெரிவித்துள்ளார்.

மேலும், கிறிஸ்மஸ் காலப்பகுதியில் உள்ளூர் முட்டை விலை அதிகரிப்பு மற்றும் மக்களுக்கு தேவையான முட்டைகளை கட்டுப்படுத்துவதற்காக சதொச நிறுவனத்துக்கு இதுவரை தலா 10 இலட்சம் முட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இந்தியாவில் இருந்து இம்மாதம் 3 கோடி முட்டைகளை இறக்குமதி செய்வதற்கு அரச வர்த்தக கூட்டுத்தாபனத்துக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கடந்த செவ்வாய்க்கிழமை ஒரு கோடி முட்டைகள் பெறப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (ஐ)

# யாழில் மயங்கி விழுந்து இரு முதியவர்கள் மரணம்!

யாழ்ப்பாணம், டிசெ. 15

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை திடீரென மயங்கி விழுந்து முதியவர்கள் இருவர் உயிரிழந்தனர்.

சங்கானை, பொன்னாலை பகுதிகளில் இந்த உயிரிழப்புகள் பதிவாகின.

சங்கானையில் அரைக்கும் ஆலை ஒன்றில் அரைக்க கொடுத்து விட்டு கதிரையில் காத்திருந்தவர் திடீரென மயங்கி விழுந்தார். சங்கானை பிரதேச மருத்துவ மனையில் சேர்ப்பிக்கப்பட்ட நிலையில் அவர் உயிரிழந்தார்.

பொன்னாலை மேற்கு சுழிபுரத்தை சேர்ந்த இரட்ணம் அருளானந்தம் (வயது 69) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

இதேவேளை பலாலியில் சைக்கிளில் சென்ற முதியவர் மயங்கி விழுந்தார். வீதியால் சென்றவர்கள் அவரை தெல்லிப்பழை மருத்துவமனையில் சேர்ப்பித்த நிலையில் அவர் உயிரிழந்தார்.

இந்த சம்பவத்தில், புன்னாலைகட்டுவன் வடக்கை சேர்ந்த செல்வம் சிவானந்தம் (வயது 81) என்பவரே உயிரிழந்தார். (ஐ)

**யாழ்.கச்சேரிக்கு அருகில் காணி உடன் விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகில் 3½ பரப்புக் காணி, இரண்டு வெட்டுக் கிணறுகளுடன் உடன் விற்பனைக்குண்டு. இந்தக் காணி சுண்டுக்குழி தபால் நிலையத்துக்கு அருகில் - கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ளது. 55 மில்லியனுக்கு (5 கோடியே 50 லட்சம்) மேலான விலை எதிர்பார்க்கப்படுகிறது.

தொடர்புகளுக்கு : +447963743585 (Whatapp),
0212227141(Sri Lanka)
E.mail : Jamesraj_uk@yahoo.co.uk

Eelanadu
15.12.2023 வெள்ளிக்கிழமை
சோபகிருது வருடம், கார்த்திகை 29

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
**தொலைபேசி : 021 205 2300**

# தமிழ் கட்சிகள் என்ன செய்யப் போகின்றன?

அடுத்த ஆண்டு தேர்தல்களுக்கான ஆண்டாக இருக்கப் போகின்றது. தமிழ் கட்சிகள் மத்தியில் இந்த விடயம் தொடர்பில் போதிய கவனம் செலுத்தப்பட்டதாகத் தெரியவில்லை. ஆரம்பத்தில் ஒரு பொது வேட்பாளர் தொடர்பில் உரையாடப்பட்டது. இது தொடர்பில், ‘ஈழநாடு’ சாதகமான பார்வையை வெளிப்படுத்தியிருந்தது. இதற்கு இரண்டு காரணங்கள் இருநதன. ஒன்று, தமிழ்த் தேசிய கட்சிகள் அனைத்தையும் ஒரு புள்ளியில் சந்திப்பதற்கான வாய்ப்பு. இரண்டு, தென்னிலங்கையை தமிழர்களை நோக்கி இறங்கிவரச் செய்வதற்கான வாய்ப்பைப் பயன்படுத்துதல்.

இந்த இரண்டு அடிப்படையிலும்தான் ஒரு பெது வேட்பாளர் தொடர்பில் ஆராயுமாறு நாம் வலியுறுத்தியிருந்தோம். முதலில் அவ்வாறானதொரு பொது இணக்கப்பாட்டுக்கு வரும்போதே, அது தென்னிலங்கைக்கு ஒரு தெளிவான செய்தியை வழங்கும். இது தொடர்பில் குத்துவிளக்கு சின்னத்தின் கீழுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கொள்கையளவில் இணக்கம் வெளியிட்டது. ஆனால், ஏனைய கட்சிகளுடன் இது தொடர்பில் உரையாடி பொது இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை அவர்கள் மேற்கொள்ளவில்லை.

இது ஒரு பரிந்துரை மட்டுமே - இதற்கு மாறாக வழமைபோல் ஒரு கட்சியின் அல்லது பொது வேட்பாளரை தமிழ் கட்சிகள் ஆதரிக்கப் போகின்றன என்றால், அது தொடர்பிலும் கட்சிகள் தெளிவாக முடிவுக்கு வரவேண்டும். அதில் ஒரு பொது இணக்கப்பாடு ஏற்பட வேண்டும். வடக்கு, கிழக்கில் மேற்கொள்ளப்படும் முக்கிய முடிவுகளில் பொது இணக்கப்பாடு அவசியம். யுத்தத்துக்கு பின்னரான தமிழ்த் தேசிய அரசியலை கையாள்வதில் பொது இணக்கப்பாடு இன்றுவரையில் ஏற்படவில்லை. நாம் தொடர்ந்தும் இது தொடர்பில் வலியுறுத்தி வந்திருக்கின்றோம்.

மோசமான பொருளாதார நெருக்கடியிலிருந்து மீளும் முயற்சியில் இருக்கும் இலங்கைத் தீவைப் பொறுத்தவரையில் ஜனாதிபதி தேர்தலானது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. இந்தத் தேர்தல், இதுவரையில் இடம்பெற்ற தேர்தல் போன்றதல்ல. இந்தத் தேர்தல் முடிவு. இலங்கைத் தீவின் அரசியல் எதிர்காலத்தை தீர்மானிக்க வல்லது. அதேவேளை, இந்திய மற்றும் அமெரிக்க தரப்புகளும் இந்தத் தேர்தல் முடிவை கூர்ந்து கவனிக்கும். அவர்களைப் பொறுத்தவரையில் இந்து சமுத்திர பிராந்தியத்தை அடிப்படையாகக் கொண்டு இடம்பெறும் அரசியல் போட்டியின் பின்புலத்தில் - இலங்கைத் தீவை ஆட்சி செய்யப் போகிறவர்கள் யார் - என்னும் கேள்வி முக்கியத்துவம் பெறுகின்றது.

2015இல், அவ்வாறானதொரு நிலைமையே ஏற்பட்டது. இப்போது மீண்டும் அவ்வாறானதொரு சூழலே ஏற்பட்டுள்ளது. ஆனால், ஒப்பீட்டடிப்படையில் 2015 தேர்தலை விடவும் 2024 தேர்தல் அதிக முக்கியத்தும் உடையதாகின்றது. அதேவேளை. 2024 இலங்கையில் மட்டுமல்ல, இந்தியா, பங்களாதேஷ், பாகிஸ்தான் ஆகிய நாடுகளிலும் தேர்தல்களுக்கான ஆண்டாக இருக்கின்றது. இந்தத் தேர்தல்களின் முடிவுகள் சர்வதேச அளவில் எதிர்பார்க்கப்படுகின்றன. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் அமைந்திருக்கும் இலங்கைத் தீவின் தேர்தல் முடிவு உன்னிப்பாக நோக்கப்படும்.

2015 தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகள் தீர்மானகரமான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தன. ஆனால், தமிழ் மக்களின் அரசியல் வாழ்வில் எத்தகைய தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. புதிய அரசியல் யாப்பு, நிலைமாறுகால நீதி – என்றெல்லாம் உச்சரிக்கப்பட்ட போதிலும்கூட இறுதியில் எதுவும் நடைபெறவில்லை.

அவ்வாறானதொரு நிலைமைதான் மீண்டும் ஏற்படுமென்றால் தமிழ் கட்சிகள் இருப்பதில் என்ன பயன் - என்னும் கேள்வி எழும். இந்தப் பின்புலத்தில்தான் தமிழ் கட்சிகள் என்ன செய்யப் போகின்றன  - என்னும் கேள்வி எழுகின்றது. உண்மையிலேயே தமிழ் கட்சிகள் இந்த நிலைமையை கையாள்வதற்காக என்ன செய்யப் போகின்றன? எவ்வாறான உபாயங்களை கையாளப் போகின்றன?

# இலங்கை இனப் பிரச்னை விடயத்தில் உடனடி தீர்வை பெற்றுத் தாருங்கள்!

## இந்திய பிரதமருக்கு இந்து மாமன்றம் கடிதம்

*கொழும்பு, டிசெ. 15*

இலங்கையின் இனப் பிரச்னை விடயத்தில் தமிழ், முஸ்லிம் கட்சிகளை அழைத்து ஆலோசித்து அரசாங்கத்துடன் பேச்சு நடத்தி உடனடி தீர்வை இந்திய பிரதமர் பெற்றுத் தர வேண்டும் என்று அகில இலங்கை இந்து மாமன்றம் இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

இந்து மாமன்றத்தின் உபதலைவர் ஆறு. திருமுருகன் நேற்று முன்தினம் இந்தக் கடிதத்தை அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டவை அப்படியே வருமாறு,

“இந்திய அரசாங்கம் உடன் நடவடிக்கை எடுத்து இலங்கையில் உள்ள இனப் பிரச்னையை தீர்த்து வைக்க வேண்டும். இந்திய பிரதமர் மற்றும் இந்திய மத்திய அரசின் பொறுப்புவாய்ந்த அமைச்சர்கள் இலங்கை தமிழர்களின் நீண்டகாலப் பிரச்னைக்கு உடனடியாக நிரந்தர தீர்வு கிடைக்க வழி செய்ய வேண்டும்.

“இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் கீழ் உருவான வடக்கு - கிழக்கு இணைந்த மாகாண சபை துண்டாடப்பட்டுவிட்டது, மாகாண சபை தேர்தல்கள் தொடர்ந்து பிற்போடப்பட்டு வருகிறது, எந்தவிதமான தீர்வும் தமிழினத்துக்கு கிட்டவில்லை. நீண்டகால அகிம்சைப் போர், ஆயுதப்போர் யாவும் செயலற்ற நிலையில் தீர்வின்றி தமிழினம் தவிக்கிறது.

“காலத்துக்குக் காலம் இலங்கையில் பதவி ஏற்கும் அரசாங்கம் உடனடி தீர்வு தருவதாக கூறி தொடர்ந்து ஏமாற்றிவருகிறார்கள். இந்திய பிரதமர் அவர்களே தமிழ், முஸ்லிம் கட்சிகளின் தலைவர்களை அழைத்து ஆலோசித்து இலங்கை அரசாங்கத்தோடு பேச்சு நடத்தி குறுகிய காலத்தில் நிரந்தர தீர்வை ஏற்படுத்தித் தருமாறு வேண்டுகிறோம்.

“இலங்கையில் நிரந்தர தீர்வு ஏற்படாத காரணத்தால் தொடர்ந்து தமிழர்கள் நாட்டைவிட்டு வெளியேறி வருகிறார்கள். தங்கள் நாட்டிலும் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட இலங்கை தமிழர்கள் இன்னும் அகதியாக வாழ்கிறார்கள். இந்திய பிரதமர் தமிழர்கள் சுய கௌரவத்தோடு வாழக் கூடிய சரியான தீர்வை ஏற்படுத்தி தாருங்கள். இலங்கையில் ஏற்பட்ட பொறுப்பு இனப்பிரச்னையை சீராக தீர்த்து வைக்கவேண்டிய இந்தியாவுக்கே அதிகம் உண்டு. இலங்கை தமிழர்கள் தொடர்ந்து அகதிகளாக அலைவதைத் தடுப்பதற்கு உடன் ஆவனசெய்யுமாறு நன்றியோடு வேண்டுகிறோம்” - என்றுள்ளது. (ஐ)

# உடுப்பிட்டி அமெரிக்க மிஷனில் மாணவர் மாதிரி சந்தை நிகழ்வு

*வடமராட்சி, டிசெ. 15*

உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியின் ஆரம்ப பிரிவு மாணவர்களின் இணை பாடவிதான செயல்பாடுகளில் ஒன்றான மாணவர் மாதிரி சந்தை நேற்று வியாழக்கிழமை பாடசாலையில் நடைபெற்றது.



ஆரம்ப பிரிவு ஆசிரியர்களின் வழிகாட்டலில் தரம் ஒன்று மற்றும் தரம் இரண்டு மாணவர்களின் பெற்றோர்களின் ஒத்துழைப்புடனும் நடைபெற்ற இந்த சந்தையில் மாணவர்களின் வீட்டுத்தோட்டத்தில் விளைந்த காய்கறிகள், தேங்காய்கள், இலைவகைகள், பழங்கள், கைப்பணி பொருட்கள், தின்பண்டங்கள், பனை சார்ந்த உற்பத்திகளை பாடசாலை முற்றத்தில் காட்சிப்படுத்தி விற்பனை செய்தனர்.


ஆரம்பப் பிரிவு மாணவர்களிடம் சந்தையிலோ, கடைகளிலோ பொருள்களை வாங்கி விற்கும் திறனை ஏற்படுத்தவும், கணித அறிவை மேம்படுத்தவும், பொருள்களின் பணப் பெறுமதியை தெரிந்து கொள்ளும் வாய்ப்பாகவும் இப்படியான சிறிய ஒன்றுகூடல்களின் மூலம் மன மகிழ்வை ஏற்படுத்தவும் ஒருவருக்கொருவர் கொடுத்து வாங்கும் பண்பை வளர்க்கும் ஒரு சந்தர்ப்பமாகவும் இந்நிகழ்வு அமைந்திருந்தது.

மிகுந்த ஆர்வமுடன் பொருட்களை விற்பனை செய்த மாணவர்களிடம் இருந்து ஏனைய மாணவர்களும் கிராம மக்களும் தங்களுக்குத் தேவையான பொருள்களை வாங்கி சென்றனர்.

சிறு வயதிலேயே இப்படியான அனுபவங்களை மாணவர்களுக்கு ஏற்படுத்துவதன் மூலம் உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவித்து எமது தற்சார்பு பொருளாதாரத்தை வளமாக்க இப்படியான நிகழ்வுகள் அவசியமானவை இதில் பங்கேற்ற மக்கள் கருத்து வெளியிட்டனர்.

(ஐ-02)

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
உணர்ச்சிப் பூர்வமாக பேசுவதை விட்டு அறிவுப் பூர்வமாகப் பேசுவீர்கள் செயல்படுவீர்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெறுவீர்கள். மதிக்கப்படுவீர்கள். சாதிக்கும் நாள்.

**இடபம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் உணர்ச்சிவசப்படாமல் இருங்கள் இரண்டாவது முயற்சியில் சில காரியங்கள் முடியும். உத்தியோகத்தில் வேலைச்சுமை குறையும். கடினமாக உழைக்க வேண்டிய நாள்.

**மிதுனம்**
கணவன்-மனைவிக்குள் ஆரோக்கியமான விவாதம் வந்து போகும். வியாபாரத்தில் பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் உயர்அதிகாரிகள் ஆதரிப்பார்கள். நிம்மதி உண்டாகும் நாள்.

**கடகம்**
எதிர்பாராத தனவரவு உண்டு. பிள்ளைகளால் பெருமை அடைவீர்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்றுத் தீரும். உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார். அமோகமான நாள்.

**சிம்மம்**
குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். உங்களைச் சுற்றி இருப்பவர்களில் நல்லவர்கள், உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் சிலமுக்கிய ஆலோசனைகள் தருவீர்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**கன்னி**
பால்ய நண்பர்கள் தேடி வருவார்கள். வியாபாரத்தில் தள்ளிப்போன வாய்ப்புகள் தேடி வரும். சக ஊழியர்களிடம் கவனமாகப் பழகுங்கள். பழைய நினைவுகளில் மூழ்கும் நாள்.

**துலாம்**
சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். பேச்சில் கம்பீரம் பிறக்கும்.சக ஊழியர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்து கொள்வார்கள். முயற்சியால் முன்னேறும் நாள்.

**விருட்சிகம்**
இங்கிதமான பேச்சால் எல்லோரையும் கவருவீர்கள். பயணங்கள் சிறப்பாக அமையும். வியாபாரத்தில் லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் புது வாய்ப்புகள் வரும். உற்சாகமான நாள்.

**தனுசு**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிக்கனமாக இருக்க வேண்டுமென்று நினைத்தாலும் அத்தியாவசிய செலவுகள் அதிகரிக்கும். விமர்சனங்களை ஏற்று கொள்வது நல்லது.திட்டமிட்டு செயல்பட வேண்டும்.

**மகரம்**
எதையும் திட்டமிட்டு செய்ய பாருங்கள். வாகனம் அடிக்கடி செலவு வைக்கும். வியாபாரத்தில் போட்டிகளை சமாளிப்பீர்கள். பொறுப்புகள் கூடும். நிதானம் தேவைப்பட வேண்டிய நாள்.

**கும்பம்**
குடும்பத்தினருடன் மனம்விட்டு பேசுவீர்கள். நவீன சாதனங்கள் வாங்குவீர்கள். வேற்றுமதத்தவர் உதவுவார்.உத்தியோகத்தில் சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள். இனிமையான நாள்.

**மீனம்**
எதிர்பார்ப்புகள்நிறைவேறும். உடன்பிறந்தவர்கள் வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள். முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். சிந்தனை திறன் பெருகும் நாள்.

# ஹிந்தி கற்குமாறு பயணியை படையினர் கட்டாயப்படுத்துவதா?

## பாட்டாளி மக்கள் கட்சி கண்டனம்

சென்னை, டிசெ. 15

சென்னைக்கு பயணிப்பதற்காக கோவா விமான நிலையத்துக்கு வந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த பெண்ணை ஹிந்தி தெரியுமா? என்று கேட்டு அத்துமீறலில் ஈடுபட்டிருக்கிறார் மத்திய தொழில் பாதுகாப்பு படையை சேர்ந்தவர். ஹிந்தி தேசிய மொழி, கண்டிப்பாக அதை கற்க வேண்டும் என விமான பயணிகளை கட்டாயப் படுத்துவதா? என்றும் அத்துமீறும் படையினர் மீது நடவடிக்கை வேண்டும் என பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுநர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்ட அறிக்கையில்,

“சென்னைக்கு பயணிப்பதற்காக கோவா விமான நிலையத்துக்கு வந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த பெண்ணிடம் ஹிந்தி தெரியுமா? என்று கேட்டு அத்துமீறலில் ஈடுபட்டிருக்கிறார் மத்திய தொழில் பாதுகாப்பு படையை சேர்ந்தவர். ‘நான் தமிழ்நாட்டுப் பெண். எனக்கு ஹிந்தி தெரியாது’ என்று பெண் கூறியதை மதிக்காத மத்தியப் படை வீரர், ‘தமிழ்நாடு இந்தியாவில் தானே இருக்கிறது. ஹிந்தி தேசிய மொழி. வேண்டுமானால் கூகுள் செய்து பாருங்கள். இந்தியாவில் உள்ள அனைவரும் ஹிந்தி கற்க வேண்டும்’ என்று உரத்த குரலில் கூறி தமிழ் பெண்ணை அவமதித்திருக்கிறார். மத்திய பாதுகாப்புப் படை வீரரின் செயல் கண்டிக்கத்தக்கது.

விமான நிலையங்களில் பாதுகாப்புக்கு நிறுத்தப்பட்டுள்ள மத்திய தொழில் பாதுகாப்புப் படையினரில் பலர், தங்களின் பணி என்ன? என்பதை மறந்து விட்டு, ஹிந்தி தேசிய மொழி, அதைக் கற்றுக்கொள்ளுங்கள் என்று பயணிகளை அறிவுறுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளனர். சென்னை உள்ளிட்ட விமான நிலையங்களில் அரசியல் கட்சியினர், சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்களிடம் கூட அவர்கள் பலமுறை அத்துமீறியிருக்கின்றனர். ஹிந்தி மொழி இந்தியாவின் அலுவல் மொழி மட்டுமே, தேசிய மொழி அல்ல என்ற அடிப்படை கூடத் தெரியாத அவர்களுக்கு மக்கள் பிரதிநிதிகளிடமும், பொறியாளர்கள், மருத்துவர்கள் போன்றவர்களிடமும் இதுகுறித்து அறிவுரை கூற என்ன தகுதி இருக்கிறது?

ஹிந்தி தான் இந்தியாவின் தேசிய மொழி என்ற பொய்யை காலம் காலமாக சில மத்திய அமைச்சர்களும், மத்திய அரசு அதிகாரிகளும் மீண்டும், மீண்டும் கூறி வருவதன் காரணமாகவே உண்மை தெரியாத மத்திய தொழில் பாதுகாப்புப் படையினர் இத்தகைய அத்துமீறல்களில் ஈடுபடுகின்றனர். அவர்களின் பணி வரம்பு என்ன? என்பதையும், இந்தி நாட்டின் அலுவல் மொழி மட்டும் தான் என்பதையும் அவர்களுக்கு அவர்களின் உயரதிகாரிகள் புரிய வைக்க வேண்டும் - என்றுள்ளது.

# இலங்கை கைது செய்த 45 மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்!

## வெளிவிவகார அமைச்சருக்கு முதல்வர் கடிதம்

சென்னை, டிசெ. 15

இலங்கை வசமுள்ள 45 மீனவர்கள் மற்றும் 138 மீன்பிடி படகுகளை உடனடியாக விடுவிக்கத் தேவையான தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தி முதல்வர் மு. க. ஸ்டாலின் மத்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கு நேற்று கடிதம் எழுதினார்.

அக்கடிதத்தில், “புதுக்கோட்டை மாவட்டம், ஜெகதாப்பட்டினம் மீன்பிடித் துறைமுகத்தைச் சேர்ந்த 6 மீனவர்கள், ஐனோ-வுசே-08-ஆஆ-26 என்ற பதிவு எண் கொண்ட இயந்திர படகில் மீன்பிடிக்க சென்றிருந்த நிலையில், அவர்களது மீன்பிடிப் படகுடன் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளது. கடந்த ஒரு வாரத்தில் இலங்கை கடற்படையினரால் மீனவர்கள் கைது செய்யப்படுவது இது மூன்றாவது சம்பவம்.

இலங்கை கடற்படையினர் தொடர்ந்து நமது மீனவர்களின் பாரம்பரிய உரிமைகளை மீறும் வகையில் இதுபோன்று கைது நடவடிக்கையில் ஈடுபடுவதால், மீனவர்களின் வாழ்வாதாரம் பெருமளவில் பாதிக்கப்படுவதுடன், மீனவர்களின் வாழ்வில் பெருத்த அச்சத்தையும், பீதியையும் ஏற்படுத்துகிறது.

இந்த ஆறு மீனவர்கள் தவிர்த்து, ஏற்கெனவே 39 மீனவர்களும், 137 படகுகளும் இலங்கை வசம் காவலில் உள்ளது. எனவே, மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் இதில் உடனடியாகத் தலையிட்டு, இலங்கை வசமுள்ள 45 மீனவர்கள் மற்றும் 138 மீன்பிடிப் படகுகளை உடனடியாக விடுவிக்கத் தேவையான தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்” என்று முதல்வர் வலியுறுத்தியுள்ளார். (ஐ)

# தே. மு. தி. கவின் பொது செயலராக பிரேமலதா விஜயகாந்த் தெரிவானார்!



சென்னை, டிசெ. 15

பாராளுமன்றத் தேர்தல் மற்றும் கட்சி பணிகள் குறித்து விவாதிக்க சென்னை திருவேற்காட் டில் தே. மு. தி. கவின் பொதுக்குழு மற்றும் செயல்குழு கூட்டம் நடந் தது. இந்த கூட்டத்தில் விஜயகாந்த் பங்கேற்றார்.

மருத்துவமனையில் சிகிச்சை முடிந்து முதன் முறையாக அவர் கட்சி நிகழ்ச்சியில் பங்கேற்பதால் காரில் வந்த விஜயகாந்தை தொண்டர்கள் உற்சாகமாக பட்டாசு வெடித்து வரவேற்றனர்.

இந்தக் கூட்டத்தில், விஜயகாந்த் மனைவி பிரேமலதாவை பொதுச்செயலாளராக நியமித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தொடர்ந்து விஜயகாந்த் காலில் விழுந்து பிரேமலதா ஆசி பெற்றார்.

இந்த கூட்டத்தில், மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ரூ.15 ஆயிரம், உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு ரூ.10 லட்சம் நிவாரணம் வழங்க வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேலும், கூட்டணி குறித்து முடிவெடுக்க விஜயகாந்துக்கு அதிகாரம் அளிப்பது தொடர்பான தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. (ஐ)

# ஆளுநரை முதல்வர் சந்தித்து பேசுவாரா?

சென்னை, டிசெ. 15

ஆளுநர் ஆர். என் .ரவியை முதல்வர் சந்திக்க வாய்ப்புள்ளதாக கூறப்பட்டாலும் இப்போதைக்கு உறுதியாக கூற முடியாது என அமைச்சர் ரகுபதி கூறினார்.

தமிழக சட்டசபையில் நிறைவேற்றி அனுப்பப்பட்ட, சட்ட மசோதாக்கள் குறித்து பேச, முதல்வர் ஸ்டாலினுக்கு ஆளுநர் ரவி அழைப்பு விடுத்துள்ளார். முதல்வர் ஸ்டாலின் ஆளுநரை சந்திப்பாரா? என்பது குறித்து புதுக்கோட்டையில் அமைச்சர் ரகுபதி நிருபர்களுக்கு அளித்த பேட்டியில்,

கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் என்பது போது போல் உச்சநீதிமன்றம் சொன்ன பிறகு ஆளுநர் ஆர். என். ரவி இப்போது அழைப்பு விடுத்துள்ளார்.

முதல்வர் இப்போது வெள்ள நிவாரண பணிகளில் இருக்கிறார். அது முடிந்த பிறகு தான் அவர் சந்திப்பது குறித்து தெரியும். எல்லாத் தீர்மானங்களையும் ஜனாதிபதிக்கு அனுப்பிய பின் முதல்வர் ஆளுநரை சந்தித்து, என்ன பலன் கிடைக்க போகிறது என்பதை பொறுத்து இருந்துதான் பார்க்க வேண்டும். ஆளுநர் ஆர். என். ரவியை முதல்வர் சந்திக்க வாய்ப்புள்ளதாக கூறப்பட்டாலும் இப்போதைக்கு உறுதியாக கூற முடியாது - என்றார். (ஐ)

ஈழநாடு



# 2024 நடுப்பகுதிக்கு முன் கடும் வறட்சி ஏற்படும்!

## நிபுணர்கள் எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 15

**நாட்டில் 2024ஆம் ஆண்டின் நடுப்பகுதிக்கு இடையில் கடுமையான வறட்சி ஏற்படும் என, நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.**

காலநிலை மாற்றம் மற்றும் இலங்கையின் உணவுப் பாதுகாப்பில் அதன் தாக்கம் குறித்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்த உயர்மட்ட விஞ்ஞான அமர்வில் இந்த தகவல் வெளியாகியுள்ளது.

நாட்டின் உணவுப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் மற்றும் பொருளாதார நெருக்கடியால் மக்கள் இன்னல்களை எதிர்கொள்ளும் தற்போதைய நிலையில் குறித்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்கு குடும்பங்களுக்கு உணவுப் பாதுகாப்பற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

எனினும் பொருளாதார நெருக்கடி மற்றும் காலநிலை மாற்றத்தால் இந்த நிலையை நிவர்த்தி செய்வது மிகவும் கடினமாக இருக்கும் என்றும் குறித்த நிகழ்வில் கூறப்பட்டுள்ளது.

அத்துடன், தற்போதைய பொருளாதார நெருக்கடியின் போது, உணவுப் பொருட்களின் விலை உயர்வால் நுண்ணூட்டச் சத்து இடைவெளி அதிகரித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# முதியவர்களை கட்டி வைத்து நகைகள், பணம் கொள்ளை!

## கிளிநொச்சியில் சம்பவம்

கிளிநொச்சி, டிசெ. 15

கிளிநொச்சியில் முதியவர்கள் இருவரை கட்டி வைத்து விட்டு, வீட்டில் பணம், நகை கொள்ளையிடப்பட்ட சம்பவம் பதிவாகியுள்ளது.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரியகுளம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவில் வீட்டு உரிமையாளர் வெளியில் சென்ற சமயம் அவரது கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டி வீட்டுக்குள் தள்ளிச் சென்ற கொள்ளையர், வீட்டின் இருந்த முதியவர்கள் இருவரையும் கயிற்றினால் கட்டி தனி அறையில் அடைத்துள்ளனர்.

தொடர்ந்து, வீட்டில் இருந்த அனைத்து உடைமைகளும் சோதனையிட்டு அங்கிருந்த இரண்டு பவுண் தங்க நகைகள் மற்றும் 45 ஆயிரம் ரூபாய் பணம் என்பனவற்றைக் கொள்ளையிட்டுவிட்டு வீட்டில் சமைத்து வைத்திருந்த உணவையும் சாப்பிட்ட பின்னர் வீட்டில் இருந்த இரண்டு சைக்கிள்ளையும் எடுத்துச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸாரிடம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதாக வீட்டு உரிமையாளர் தெரிவித்தார். (அ)

# தீ பற்றிய வர்த்தக நிலையம்; மீசாலை பகுதியில் சம்பவம்!



யாழ்ப்பாணம், டிசெ. 15

மீசாலைப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையமொன்றில் நேற்று முன் தினம் இரவு ஏற்பட்ட தீ விபத்தினால் பெருமதியான பொருட்கள் தீயில் எரிந்து நாசமாகியுள்ளன.

குறித்த வர்த்தக நிலையத்தில் ஏற்பட்ட மின் ஒழுக்கு காரணமாகவே இத் தீ விபத்து ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த தீ விபத்தை அடுத்து அப்பகுதிக்கான மின் விநியோகமும் சுமார் ஒரு மணி நேரம் தடைப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத் தீ விபத்தினையடுத்து, சம்பவ இடத்துக்கு விரைந்த தீயணைப்புப் படையினர் தீயை கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# இணையத்தில் ஆபாசக் காட்சி வெளியிட்டு வந்த ஜோடி கைது

கொழும்பு, டிசெ. 15

பாடசாலை மாணவி போல் நடித்து ஆபாச காட்சிகளை படம்பிடித்து இணையத்தில் வெளியிடும் மோசடியில் ஈடுபட்ட தம்பதியை பொலிஸார் கைது செய்தனர்.

28 வயதுடைய பெண் ஒருவரும் 29 வயதுடைய ஆண் ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் திருமணத்தை சட்டபூர்வமாக பதிவு செய்துள்ளதாகவும், அடுத்த ஆண்டு திருமண விழாவும் நடைபெற உள்ளதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட இருவரும் பட்டதாரிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

பணம் சம்பாதிப்பதற்காக ஆபாச வீடியோக்களை தயாரித்து இணையத்தில் வெளியிட்டதாக அவர்கள் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் மாதம் ஒன்றுக்கு கிட்டத்தட்ட ஒரு இலட்சம் ரூபாவை சம்பாதித்துள்ளதாக மேலதிக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அவர்கள் கைது செய்யப்பட்டபோது, ஆபாச வீடியோக்களை தயாரிக்கப் பயன்படுத்திய உபகரணங்கள் மற்றும் கணினி ஒன்றும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

அத்துடன் படப் பிடிப்பிற்காக பயன்படுத்திய பாடசாலைச் சீருடைகள், ரைகள் மற்றும் பிற பொருட்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

நீண்ட காலமாக இந்த மோசடியை மேற்கொண்டு வரும் சந்தேகநபர்கள் ஏற்படுத்திய இணையக் கணக்கில் சுமார் 4,400 பயனாளர்கள் இருப்பதாகவும், அவர்களின் வீடியோக்கள் சுமார் 8.7 மில்லியன் முறை பார்க்கப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட பெண் சந்தேக நபர் ருவன்வெல்ல பிரதேசத்தை சேர்ந்தவர் எனவும் ஆண் சந்தேக நபர் பிலிமத்தலாவ பிரதேசத்தை சேர்ந்தவர் எனவும் தெரியவந்துள்ளது.

பிலிமத்தலாவ பிரதேசத்தில் உள்ள விடுதி ஒன்றில் தம்பதி ஆபாசமான காட்சிகளை படம் பிடித்துக் கொண்டிருந்ததாக கடுகன்னாவ பொலிஸ் நிலையத்தின் பதில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதம பொலிஸ் பரிசோதகர் சமிந்த குணரத்னவுக்கு கிடைத்த தகவல் ஒன்றுக்கு அமைய இந்த சுற்றிவளைப்பு இடம்பெற்றுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் கண்டி நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர் கடுமையான பிணை நிபந்தனைகளுடன் விடுவிக்கப்பட்டுள்ளனர். (அ)

# இலகு ரயில் திட்டம் மீண்டும்!

கொழும்பு, டிசெ. 15

இலகு ரயில் திட்டத்தை ஆரம்பிப்பது குறித்து ஜப்பான் அரசாங்கத்துடன் கலந்துரையாடல் இடம்பெற்று வருவதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

இந்த திட்டம் விரைவில் மீண்டும் ஆரம்பிக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

கொவிட் -19 தொற்றுநோய் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக, குறித்த திட்டம் இடைநடுவே கைவிடப்பட்டது. (அ)

# குடும்ப வன்முறைகளுக்கு ஆண்களும் உள்ளாகின்றனர்

## முறைப்பாடு வழங்க தொலைபேசி இலக்கம்

குடும்ப வன்முறைகளை முறைப்பாடு செய்வதற்கு 'மிதுபியச' பிரிவில் 24 மணி நேரமும் செயற்படக் கூடியதான தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத் தப்பட்டுள்ளதாக குடும்ப சுகாதாரப் பணியகம் தெரிவித்துள்ளது.

070 2 611 111 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பதன் மூலம் குடும்ப வன்முறை தொடர்பில் எந்த நேரத்திலும் தெரிவிக்க முடியும் என பணியகம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்நாட்டில் சுமார் 10 வீதமான ஆண்களும் குடும்ப வன்முறைக்கு உள்ளாகின்றனர் என குடும்ப சுகாதார பணியகத்தின் மகளிர் சுகாதார பிரிவின் திட்ட முகாமையாளர் திருமதி நெத்யாஞ்சலி மாப்பிட்டிகம தெரிவித்தார். (அ)



# மரம் முறிந்து விழுந்தமையால் வீதிப் போக்குவரத்து பாதிப்பு!

கொழும்பு, டிசெ. 15

கொழும்பு 07, கெஹரி வீதியில் நேற்று காலை 10 மணியளவில் பாரிய மரம் ஒன்று முறிந்து வீழ்ந்ததில் மின்சார இணைப்பு அமைப்பில் பாரிய சேதம் ஏற்பட்டது.

இந்த விபத்தில் ஒரு வீடும் இலேசான சேதமடைந்தது வாகனப் போக்குவரத்தும், பாடசாலை மாணவர்கள் அதிகம் கூடும் நேரத்தில் இல்லாததால் பெரும் விபத்து தவிர்க்கப்பட்டதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

தற்போது, வீதி முற்றிலும் தடைப்பட்டுள்ளதுடன், போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டது.

# மனித பாவனைக்கு உதவாத பெரிய வெங்காயம் சிக்கியது!

கொழும்பு, டிசெ. 15

பெரிய வெங்காயத்துக்கான விலை அதிகரிக்கப்பட்டதை தொடர்ந்து, சந்தைக்கு விநியோகிக்கப்படவிருந்த மனித பாவனைக்கு உதவாத ஒரு தொகை பெரிய வெங்காயம் கண்டறியப்பட்டுள்ளது.

லியனகேமுல்ல பகுதியில் உள்ள சேமிப்பு நிலையமொன்றில் வைத்தே குறித்த வெங்காயம் கண்டறியப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூன்று கொள்கலன்களில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 20 ஆயிரம் கிலோ கிராமுக்கும் அதிக நிறையுடைய பெரிய வெங்காயம் இவ்வாறு கண்டறியப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

சந்தையில் தற்போது பெரிய வெங்காயம் கிலோ ஒன்று 450 ரூபாவாக காணப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து இவ்வாறான நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# இலங்கைக்கு தொடர்ந்தும் ஆதரவு வழங்குவதற்கு தயார்!

## அமெரிக்கத் தூதுவர் அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 15

**இலங்கையின் முதலாவது விரிவாக்கப்பட்ட நிதி வசதி மீளாய்வுக்கான சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபையின் அனுமதியை அமெரிக்கா வரவேற்றுள்ளது.**



இதனடிப்படையில், பொருளாதார சீர்திருத்தங்கள் மற்றும் கொள்கைகளுக்கு ஆதரவாக இலங்கைக்கு சுமார் 337 மில்லியன் டொலர் கிடைக்கும் என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் தெரிவித்தார்.

இந்த முக்கியமான நடவடிக்கை மூலம், நாட்டின் நீடித்த சீர்திருத்தங்களின் தொடர்ச்சியான முக்கியத்துவம் வலியுறுத்தப்படுகிறது என அவர் கூறினார்.

இந்த நிலையில் இலங்கையின் பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் மறுமலர்ச்சிக்கான பாதைக்கு அமெரிக்கா தொடர்ந்து தமது ஆதரவை வழங்கும் என இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் குறிப்பிட்டார். (அ)

# மத வன்முறைகளை தூண்டும் வகையில் பதிவிடுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை!

கொழும்பு, டிசெ. 15

மத ரீதியான வன்முறைகளை ஏற்படுத்தும் வகையில் சமூக வலைத்தளங்களில் பதிவுகளை வெளியிடுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

குறித்த குற்றங்களை விசாரிப்பதற்காக பிரத்தியேகமான குழுவொன்றை உருவாக்குமாறு பொலிஸ் கணினி குற்றப்பிரிவுக்கு பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் பணிப்புரை விடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் ஊடகப்பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் குறித்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, வன்முறைகளை ஏற்படுத்தும் வகையில் பதிவுகளை பதிவிடுவோருக்கு எதிராக முறைபாடுகள் அளிப்பதற்கு விசேட தொலைபேசி இலக்கங்களும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

0112300637, என்ற தொலைபேசி இலக்கத்தினூடாகவும் 0112381045 என்ற தொலைநகல் இலக்கத்தினூடாகவும் முறைப்பாடு அளிக்கமுடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ccid.religious@police.gov.lk என்ற மின்னஞ்சல் வழியாகவும் முறைபாடுகளை அளிக்க முடியும் என்றும் குறித்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)

# குடிவரவு திணைக்கள பணியாளர்கள் பணிப் புறக்கணிப்பு கைவிடப்பட்டது

கொழும்பு, டிசெ. 15

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள பணியாளர்கள் முன்னெடுத்த பணிப்புறக்கணிப்பும் கைவிடப்பட்டது.

குறித்த திணைக்களத்தின் மேலதிக கட்டுப்பாட்டாளர் நாயகத்தை பதவி நீக்குமாறு கோரி அவர்கள் நேற்று முற்பகல் திடீர் பணிப்புறக்கணிப்பை முன்னெடுப்பதாக அறிவித்தனர்.

இதனையடுத்து கடவுச்சீட்டை பெறுவதற்காக சென்றவர்கள் பாரிய அசௌகரியங்களை எதிர்நோக்கியிருந்தனர்.

இதனால், அங்கு அமைதியின்மையும் ஏற்பட்டிருந்தது.

இந்த நிலையில், குறித்த பணியாளர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர், பணிப்புறக்கணிப்பு கைவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# லெபனான் பிரஜையின் பணத்தை திருடிய சீன நாட்டவர் சிக்கினார்!

கொழும்பு, டிசெ. 15

நாட்டுக்கு வருகைத்தந்த லெபனான் பிரஜை ஒருவரிடம் இருந்து 50 இலட்சம் ரூபாய் பெறுமதியான டொலரை திருடிய சீனப் பிரஜையொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்க விமானநிலைய சுற்றுலா பொலிஸாரால் அவர் கைது செய்யப்பட்டார்.

விமானத்தின் மின்விளக்குகள் அணைக்கப்பட்ட நிலையில் குறித்த சீன பிரஜை லெபனான் பிரஜையின் பையிலிருந்து அமெரிக்க டொலர்களை எடுத்துவிட்டு அதில் எகிப்தின் நாணய அலகான பவுண்ஸ்களை வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பின்னர், லெபனான் பிரஜை விமான நிலையத்தில் டொலரை மாற்றுவதற்காகச் சென்றபோது, பையில் அமெரிக்க டொலர்கள் காணப்படாததை அடுத்து, விமான நிலைய பொலிஸாரிடம் முறைப்பாடு அளித்தார்.

இந்தநிலையில், முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளுக்கு அமைய, குறித்த சீனப்பிரஜை கைது செய்யப்பட்டார். (அ)

# புகைத்தல், மதுசார பாவனை; அதிகரிக்கும் உயிரிழப்புகள்!

கொழும்பு, டிசெ. 15

நாட்டில் புகைத்தல் மற்றும் மதுசார பாவனை காரணமாக நாளாந்தம் 40 பேர் உயிரிழப்பதாக மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு அதன் பணிப்பாளர் சம்பத் டி சேரம் இதனைத் தெரிவித்தார்.

அதேநேரம் மதுசார பாவனை எமது நாட்டிற்கு பெரும் சுமையாக மாறியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

மதுபான நிலையங்களை, திறக்கும் காலத்தை அதிகரிப்பதன் ஊடாக விபத்து மற்றும் குற்றச் செயல்கள் அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் அதிகளவில் காணப்படுகின்றன.

சுற்றுலாத் துறை வருமானத்தை அதிகரிக்கும் நோக்கில் இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதாக அரசாங்கம் தெரிவித்தாலும், இது மதுசாரம் உற்பத்தி மற்றும் விநியோக நிறுவனங்களின் மறைமுக விளம்பர நோக்காக காணப்படுவதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

கடந்த 2022ஆம் ஆண்டு அரசாங்கத்திற்கு கிடைக்கப்பெற்ற மதுசார வரித் தொகை 165.2 பில்லியன் ரூபாவாகும்.

இருப்பினும் ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி திட்டத்தினால் நடத்தப்பட்ட ஆய்வின் அடிப்படையில் மதுசார பாவனை காரணமாக அரசாங்கத்திற்கு 237 பில்லியன் ரூபாய் சுகாதாரம் மற்றும் பொருளாதார இழப்பு ஏற்பட்டுள்ளதாக மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையத்தின் பணிப்பாளர் சம்பத் டி சேரம் குறிப்பிட்டார். (அ)

# தேசிய கண் வைத்தியசாலையின் பணிப்புறக்கணிப்பு இடைநிறுத்தம்!

கொழும்பு, டிசெ. 15

தேசிய கண் வைத்தியசாலையில் முன்னெடுக்கப்படவிருந்த அடையாள பணிப்புறக்கணிப்பானது கைவிடப்பட்டுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சின் செயலாளருடனான கலந்துரையாடலை தொடர்ந்து பணிப்புறக்கணிப்பு கைவிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இந்தநிலையில், நேற்று காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை பணிப்புறக்கணிப்பை முன்னெடுக்கவுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் முன்னதாக அறிவித்திருந்தது. (அ)

# யாழில் கஞ்சாவுடன் இரண்டு பேர் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 15

யாழ்ப்பாணம்-சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் சுமார் 07 கிலோ கஞ்சாவுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்கள் பயணித்த வாகனமும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கிளிநொச்சிப் பகுதியில் இருந்து கேரளக் கஞ்சாவை கடத்தி வருவதாக இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், சாவகச்சேரிப் பகுதியில் பொலிஸாருடன் இராணுவப் புலனாய்வாளர்களும் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கையில் சந்தேகத்துக்கு இடமான முறையில் பயணித்த வாகனத்தை மறித்துச் சோதனையிட்டபோதே வாகனத்தில் இருந்து 07 கிலோ கஞ்சாவை மீட்டனர்.

அதனையடுத்து, வாகனத்தில் பயணித்த இருவரையும் கைது செய்த பொலிஸார், கைது செய்யப்பட்டவர்களையும் வாக னம் மற்றும் கஞ்சாவையும் பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர். (அ)

# மாணவியின் புத்தகப் பையில் பாம்பு!

கொழும்பு, டிசெ. 15

ஹிங்குராக்கொடை புறநகர் பாடசாலையொன்றில் 8 தரத்தில் கல்வி கற்கும் சிறுமி ஒருவரின் புத்தகப் பையில் அதி விஷப் பாம்பு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக ஹிகுராக்கொட கல்வி வலயத் தகவல்கள் தெரிவித்தன.

வழக்கம் போல், காலையில் பாடசாலைக்கு வந்த சிறுமி புத்தகத்தை எடுக்க பையை திறந்தபோது, பைக்குள் ஏதோ குளிர்ச்சியாக கையில் சிக்கியுள்ளது.

அப்போது, அதில் பாம்பு இருப்பதைப் பார்த்து சிறுமி அலறி துடித்ததையடுத்து ஆசிரியைகள், பாம்புடன் இருந்த புத்தகப் பையை வகுப்பறையில் இருந்து எடுத்துச் சென்று பாப்பைக் காட்டுக்குள் விட்டனர்.

சிறுமியின் வீட்டில் புத்தகப் பைக்குள் பாம்பு ஊர்ந்து சென்றிருக்கலாம் எனவும் நொடிப்பொழுதில் அந்தப் பெண் பாம்புக் கடியில் இருந்து உயிர் பிழைத்திருக்கலாம் எனவும் நம்பப்படுகிறது. (அ)

# கடலில் மாயமான சிறுவன்!

கொழும்பு, டிசெ. 15

பாணம பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கடலில் நீராடிய சிறுவன் கடலில் காணாமல் போயுள்ளதாக கிடைக்கப்பெற்ற தகவலை தொடர்ந்து அப்பகுதியில் தேடுதலில் ஈடுபடுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு காணாமல்போன சிறுவன் கம்பஹா-கணேமுல்ல பிரதேசத்தை சேர்ந்த 15 வயதுடையவராவார்.

குறித்த சிறுவன் கணேமுல்ல பிரதேசத்திலுள்ள விகாரையொன்றின் சில தேரர்கள் மற்றும் மேலும் சில நபர்களுடன் கடலில் நீராடிக்கொண்டிருந்தபோதே காணாமல் போயுள்ளார்.

காணாமல்போன சிறுவனை தேடும் பணியில் பொலிஸ் கடல் பாதுகாப்பு பிரிவினர் மற்றும் பிரதேசவாசிகள் ஈடுபட்டனர்.

இந்த சம்பவம் தொடர்பில் பாணம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# பச்சிளம் சிசு சடலமாக மீட்பு!

கொழும்பு, டிசெ. 15

மஹியங்கனை பொலனறுவை பிரதான வீதியில், சிசு ஒன்று சடலமாக மீட்கப்பட்டுள்ளது.

பிறந்து ஒருநாள் என சந்தேகிக்கப்படும் சிசு ஒன்றின் சடலமே மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளது.

சடலம் மஹியங்கனை ஆதார வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ள நிலையில், பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு உடன் நியமிக்கப்படவேண்டும்

## சர்வதேச நாணய நிதியம் வலியுறுத்து

**கொழும்பு, டிசெ. 15**
**வெளிப்படைத்தன்மையுடைய ஊழல் ஒழிப்பு ஆணைக் குழு ஒன்று நியமிக்கப்படவேண்டியது அவசியமாகும் என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.**

அரச தொழில் முயற்சியாளர்களின் வருமானத்தை அதிகரிப்பதற்கு தற்போதைய அரசாங்கம் முன்னெடுத்து வரும் நடவடிக்கைகளை சர்வதேச நாணய நிதியம் வரவேற்றுள்ளது.

விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் முதலாம் மதிப்பாய்வு கூட்டம் நிறைவுற்றதன் பின்னர், சர்வதேச நாணய நிதிய இலங்கைக்கான கடன் திட்டத்தின் பிரதானி பீட்டர் ப்ருயர் தெரிவித்தார்.

அத்துடன் வெளிப்படைத்



தன்மையுடைய ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டியது அவசியமாகும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

(அ)

# தாயை தாக்கிவிட்டு மகளை கடத்திய குழு

கொழும்பு, டிசெ. 15

தனியார் வகுப்புக்குச் சென்றுவிட்டு தாயுடன் வீட்டுக்கு திரும்பிக் கொண்டிருந்த மாணவி ஒருவர், காதலன் என கூறிய இளைஞனால் கடத்திச் செல்லப்பட்டதாக மத்துகம பொலிஸார் தெரிவித்தனர்.

மாணவியின் தாயை தாக்கி விட்டே அவரைக் கடத்திச் சென்றதாக முறைப்பாடு செய்துள்ளதாக மத்துகம பொலிஸார் கூறினர்.

ஹொரவல பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் மாணவி, மத்துகம பிரதேசத்தில் உள்ள தனியார் வகுப்புக்கு ஒன்றுக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது, முச்சக்கர வண்டியில் மற்றுமொரு நபருடன் வந்த சந்தேக நபர் மாணவியைக் கடத்திச் சென்றதாக அவரின் தாய் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதன்போது மாணவி கடத்தப்பட்ட முச்சக்கரவண்டியில் தாய் ஏற முற்பட்டதையடுத்து சந்தேகநபர் அவரை உதைத்து விட்டு தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

(அ)

# மகிந்தவிடம் இமாலய பிரகடனத்தை சமர்ப்பித்தது உலகத் தமிழ் பேரவை



கொழும்பு, டிசெ. 15

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் உலகத் தமிழ் பேரவை இமாலயப் பிரகடனத்தை சமர்ப்பித்துள்ளது.

உலகத் தமிழ் பேரவையின் பேச்சாளர் சுரேன் சுரேந்திரன் உள்ளிட்ட பௌத்த பிக்குகள் அடங்கிய குழுவினர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்து கலந்துரையாடினர்.

இதன் பின்னர் இமாலய பிரகடனத்தை குறித்த குழுவினர் மகிந்த ராஜபக்ஷவிடம் கையளித்தனர்.

இந்த சந்திப்பு உலகத் தமிழ் பேரவையின் வேண்டுகோளுக்கு இணங்க முன்னெடுக்கப்பட்டதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நெற்செய்கை நோய்த்தாக்கம் குறித்து விவசாயப் பணிப்பாளர் நேரில் ஆய்வு

கிளிநொச்சி, டிசெ. 15

கிளிநொச்சி மாவட்ட பெரும் போக நெற்செய்கையில் ஏற்பட்டுள்ள நோய்த் தாக்கங்களை நேரில் சென்று ஆராய்வதற்காக கிளிநொச்சி மாவட்ட விவசாயப் பணிப்பாளர் சூரியகுமாரி ஜெகதீஸ்வரி உள்ளிட்ட குழுவினர் நேற்று முன் தினம் வட்டக்கச்சி, இராமநாதபுரம், கல்மடு நகர் போன்ற பகுதிகளுக்கு சென்று பார்வையிட்டனர்.

இதன்போது விவசாயப் பணிப்பாளர் நோய்த் தாக்கங்களுக்கான தீர்வினையும் அதற்கான ஆலோசனைகளையும் வழங்கினார்.

அத்தோடு அவர்,

தற்பொழுது அநேகமான பகுதிகளில் கிருமிநாசினி விற்பனை நிலையங்களில் காலாவதியான கிருமிநாசினிகள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அதனை அவதானிக்காத சில விவசாயிகள் தொடர்ச்சியாக காலாவதியான கிருமிநாசினி



களை பயன்படுத்தி வந்தமையும் கண்டறியப்பட்டுள்ளது.

எனவே, இது தொடர்பாக விவசாயிகள் மிகுந்த அவதானத்துடன், கிருமிநாசினிகளில் ஒட்டப்பட்டுள்ள காலாவதி திகதிகளை சரியாக உறுதிப்படுத்திக்கொண்ட பின்னர், தங்களது பயன்பாட்டுக்கு அவற்றை கொள்வனவு செய்ய வேண்டும்.

அத்துடன், நோய்த்தாக்கங்கள் ஏற்படும்போது அருகில் உள்ள கமநல சேவை விவசாய போதனை ஆசிரியரின் ஆலோசனைகளுக்கு அமைய, கிருமிநாசினிகளை பயன்படுத்த வேண்டும்.

தற்பொழுது பயிர்களிடையே பரவும் நோய்த் தாக்கத்தால் கிளிநொச்சி மாவட்டத்தில் 8.000 ஹெக்ரேயர் அளவு பயிர் நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன-எனவும் தெரிவித்தார்.

(அ)

# இமாலயப் பிரகடனமா? எமக்கு எதுவும் தெரியாது

## கைவிரிக்கிறது பௌத்தசாசன அமைச்சு

கொழும்பு, டிசெ. 15

உலகதமிழர் பேரவையும் பௌத்த மதகுருமார்களும் இணைந்து தயாரித்துள்ள பன்முகத்தன்மையை வலியுறுத்தும் இமாலய பிரகடனம் குறித்து தங்களுக்கு எதுவும் தெரியாது என பௌத்தசாசன அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த வாரம் பன்முகத்தன்மையை முன்னிலைப்படுத்தும் இமாலயப் பிரகடனத்தை உலக தமிழர் பேரவையின் பிரதிநிதிகளும் பௌத்த மதகுருமாரும் ஜனாதிபதியிடம் கையளித்தனர்.

இந்நிலையில் இந்த பிரகடனத்தில் கைச்சாத்திட்ட தரப்பினருடன் தங்களுக்கு எந்த தொடர்பும் இல்லை என பௌத்தசாசன அமைச்சின் செயலாளர் சோமரட்ண விதானபத்திரன தெரிவித்தார்.

குறிப்பிட்ட பிரகடனம் குறித்த முழுமையான விவரங்கள் அமைச்சுக்கு இன்னமும் கிடைக்கவில்லை எனவும் அவர் கூறினார்.

இதன் காரணமாக இந்த பிரகடனத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் எந்த நடவடிக்கையையும் எடுக்க முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

பிரகடனத்தை முழுமையாக ஆராய்ந்த பின்னரே அதனை நடைமுறைப்படுத்துவது குறித்து ஆராயமுடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

(அ)

# சிலாவத்துறை கடலில் சட்டவிரோதமாக கடலட்டைகளை பிடித்த ஏழு பேர் கைது!



மன்னார், டிசெ. 15

சிலாவத்துறை கடற்பரப்பில் சட்டவிரோதமாக கடலட்டை பிடித்த 07 பேர் கடற்படையினரால் நேற்று முன் தினம் புதன்கிழமை அதிகாலை கைது செய்யப்பட்டனர்.

சிலாவத்துறை கடற்பரப்பில் கடற்படையினர் மேற்கொண்ட விசேட தேடுதல் நடவடிக்கையின்போது சிலாவத்துறை கடல் பகுதியில் சட்டவிரோதமான முறையில் நீரில் மூழ்கி கடலட்டை பிடித்துக் கொண்டிருந்த 7 பேரை கடற்படையினர் கைது செய்தனர்.

இதன்போது 02 படகுகள், டைவிங் கருவிகள் மற்றும் சட்டவிரோதமாக பிடிக்கப்பட்ட சுமார் 874 கடல் அட்டைகளும் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்டவர்கள் மன்னாரைச் சேர்ந்த 22 வயதுக்கும் 48 வயதுக்கும் இடைப்பட்டவர்கள்.

கைதான 7 பேரும் அவர்களின் உடைமைகள் மற்றும் கடல் அட்டைகளுடன் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக சிலாவத்துறை கடற்றொழில் பரிசோதகரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

(அ)

# மெதகதுர ஓயா பாலம் இடிந்து வீழ்ந்து இரு பெண்கள் காயம்!

கொழும்பு, டிசெ. 15

உமா ஓயாவின் கிளை நதியான மெதகதுர ஓயாவின் குறுக்கே நிர்மாணிக்கப்பட்ட பாதுகாப்பற்ற கொங்கிரீட் பாலம் கடும் மழை காரணமாக இடிந்து வீழ்ந்துள்ளதாக ஹப்புத்தளை பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது ஹப்புத்தளை, மெதகதுர பிரதேசத்தை சேர்ந்த 65 மற்றும் 54 வயதுடைய இரு பெண்கள் காயமடைந்துள்ளதாக வைத்தியசாலை பேச்சாளர் தெரிவித்தார்.

குறித்த பாலத்தின் மீது இந்த இரண்டு பெண்களும் வீட்டுக்கு நடந்து சென்று கொண்டிருந்தபோதே பாலம் உடைந்து ஓயாவில் வீழ்ந்துள்ளது.

(அ)

# டெங்கு நுளம்பு பரவக்கூடிய சூழலை வைத்திருப்போர் மீது சட்ட நடவடிக்கை

## கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஸக்கீலா இஸ்ஸதீன் எச்சரிக்கை

அம்பாறை, டிசெ. 15

**அம்பாறை மாவட்டத்தில் பெய்துவரும் இடைவிட்ட மழை காரணமாக தேங்கி நிற்கும் நீர் மூலம் டெங்கு நுளம்புகளின் பெருக்கம் அதிகரிக்கக்கூடிய வாய்ப்புகள் அதிகமாக காணப்படுவதாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஸக்கீலா இஸ்ஸதீன் தெரிவித்துள்ளார்.**



வீடுகள், பாடசாலைகள், அரச மற்றும் தனியார் நிறுவனங்கள், வெற்று வளவுகள், மதஸ்தலங்கள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் பொதுச்சந்தைகள் - போன்ற இடங்களில் மழைநீர் தேங்கி காணப்படுவதால் டெங்கு நுளம்புகளின் பெருக்கம் அதிகரிக்கக்கூடும். எனவே பொது மக்கள் இவ்வாறான இடங்களை அடையாளம் கண்டு நீர் தேங்கி நிற்கும் சூழலை இல்லாதொழிக்குமாறும், குப்பை கூளங்களை குழிதோண்டி புதைக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

தத்தமது பாடசாலை வளாகத்தில் சிரமதானம் மூலம் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பாடசாலை அதிபர்கள் பணிக்கப்பட்டுள்ளனர்.

வீடுவீடாக பொதுச்சுகாதார பரிசோதகர்கள் தற்போது பரிசீலனை நடவடிக்கைகளில் ஈடுபடுவதனால் அவர்களுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குமாறும், இதனையும் மீறி டெங்கு நுளம்புகள் பரவும் சூழலை வைத்திருப்போருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

# குரங்குகளால் அசௌகரியம்



மட்டக்களப்பு, டிசெ. 15

மட்டக்களப்பு காத்தான்குடி நகர சபை பிரிவில் குரங்குகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளதால் பொது மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

பெரும் எண்ணிக்கையிலான குரங்குகள் கூட்டம் கூட்டமாக வீட்டுக் கூரைகளின் மேலால் ஏறிப்பாய்வதால் தற்போதைய பருவமழை காலத்தில் நனைந்து ஈரத்தன்மையுடன் காணப்படும் ஓடுகள் உடைந்து வீட்டின் உட்பகுதியில் விழுவதால் அதிக சிரமத்துடன் வாழ்ந்து வருவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

அதே நேரம் பல்வேறு பயிர் வகைகளையும் குரங்குகள் கடித்து நாசமாக்கி வருவதாகவும் இதனால் குறைந்த வருமானம் பெறுவோர் மிகவும் பாதிப்படைந்துள்ளதாகவும் பிரதேச வாசிகள் கூறினர்.

குரங்குகளின் அட்டகாசங்களை கட்டுப்படுத்த மாவட்ட வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

# அக்கரைப்பற்று அஸ் ஸிராஜ் தேசியப் பாடசாலை மாணவத் தலைவர்களுக்கு தலைமைத்துவ பயிற்சி



அக்கரைப்பற்று, டிசெ. 15

அக்கரைப்பற்று அஸ் ஸிராஜ் தேசிய பாடசாலை புதிதாக தெரிவு செய்யப்பட்ட மாணவத் தலைவர்களுக்கான வதிவட தலைமைத்துவ பயிற்சி முகாம் அண்மையில் 5 ஆம் கட்டை ஆலிம்நகர் ஜும்ஆப் பள்ளிவாசல் வளாகத்தில் நடைபெற்றது.

"ஆற்றல்மிக்க தலைமைத்துவம் - செயற்பாட்டு வடிவம் " எனும் தொனிப்பொருளிலான பயிற்சி முகாமில் சிரேஷ்ட உளவளத்துறை ஆலோசகர் மனூஸ் அபூபக்கர் வளவாளராக கலந்து கொண்டார். (அ)

# கல்குடா வலயத்தில் ஆரம்பப் பிரிவு மாணவர்கள் பாராட்டிக் கௌரவிப்பு



மட்டக்களப்பு, டிசெ. 15

கல்குடா கல்வி வலயத்தின் மொழித்திறன் மற்றும் 100 சதுர கணித்தல் போட்டி நிகழ்வுகளில் வெற்றியீட்டிய மாணவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் வலயத்தின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

ஆரம்பபிரிவிற்கான உதவிக் கல்விப் பணிப்பாளர் க.யோகராஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம அதிதிகளாக நிருவாகத்திற்கான பிரதிக்கல்விப் பணிப்பாளர் திருமதி.சிவசங்கரி கங்கேஸ்வரன், அபிவிருத்திக்கான பிரதிக்கல்விப் பணிப்பாளர் முஹம்மது அபூபக்கர் றிஸ்மியா பாணு, கணக்காளர் வி.கணேசமூர்த்தி, நிதி உதவியாளர் திருமதி.ப.லிங்கேஸ்வரன். மற்றும் ஆசிரிய ஆலோசகர்களான, திருமதி.ஈ.வீ.கனகரெட்ணம், தனலக்சுமி தருமராஜா, திருமதி.சௌ.அருளேந்திரன், திருமதி.கே.ரவீந்திரகுமார், ஏ.சந்திரகாந்தன், திருமதி.கே.கமலநாதன், அலுவலக உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலரும்கலந்துகொண்டு நிகழ்வை சிறப்பித்திருந்தனர்.

03 கோட்டங்களிலும் மொழித்திறன் மற்றும் 100 சதுர கணித்தல் போட்டி நிகழ்வுகளில் சிறந்த சாதனைகளை நிகழ்த்திய மாணவர்களுக்கு வெற்றிக்கிண்ணங்கள் மற்றும் சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# மட்டக்களப்பில் இடம்பெற்ற சிறுவர் பாதுகாப்பு மாநாடு!



மட்டக்கலப்பு, டிசெ. 15

பாடசாலை மட்டத்தில் சிறுவர் பாதுகாப்பினை உறுதிப்படுத்தி பிள்ளை நேய சூழலை உருவாக்கும் விதத்தில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தேசிய நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் மாணவர் தூதுவர் நிகழ்ச்சி திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அதன் ஒரு கட்டமாக பாடசாலையின் சிரேஸ்ட மாணவ தலைவர்கள் மற்றும் பொறுப்பாசிரியர்களை உள்ளடங்கிய சிறுவர் பாதுகாப்பு மாநாடு நேற்று முன் தினம் திகதி மாவட்ட செயலகத்தின் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் ஏற்பாடு செய்யப்பட்டு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சகல கல்வி வலயங்களையும் உள்ளடக்கிய மாணவ தூதுவர் நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் சிரேஷ்ட மாணவர்கள் மற்றும் பொறுப்பாசிரியர்கள் பங்குபற்றினர்.

இந்நிகழ்வு மட்டக்களப்பு மாவட்ட செயலக உதவி மாவட்ட செயலாளர் ஆ.நவேஸ்வரன் தலைமையில் மாவட்ட சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் திருமதி நிகரா றியாஸ் மற்றும் மாவட்ட உள சமூக உத்தியோகத்தர் சு.பிரபாகர் ஆகியோரின் இணைப்பாக்கத்தின் கீழ் இடம்பெற்றுள்ளது.

இந்நிகழ்விற்கு வளவாளர்களாக மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஜி.சுகுணன் மற்றும் வைத்திய கலாநிதி டான் சௌந்தரராஜன் ஆகியோர் கலந்துகொண்டனர். (அ)

# வலயக்கல்விப் பணிமனை ஏற்பாட்டில் பயிற்சி வகுப்பு



அக்கரைப்பற்று, டிசெ. 15

அக்கரைப்பற்று கல்வி வலயத்தின் அனுசரனையோடு மாவட்ட சாராணர் சங்கத்தின் ஏற்பாட்டில் ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்பு அக்கரைப்பற்று அஸ்ஸிறாஜ் மாகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

மாவட்ட சாரண ஆணையாளர் எம்.ஐ.உதுமாலெவ்வை தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அக்கரைப்பற்று வலயக்கல்விப்பணிப்பாளர் ஏ.எம்.றகுமத்துல்லா பிரதம அதிதியாகவும்,உதவி ஆணையாளர்கள் கௌரவ அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்

இதேவேளை பயிற்சியில் கலந்து கொண்ட ஆசிரியர்கள் முன்னிலையில் பிரதம அதிதி பொன்னாடை போத்தி கௌரவிக்கப்பட்டார். (அ)

# சமூக வலைத்தள பிரபலம் 19 வயதில் திடீர் மரணம்!



பிரேசிலியா, டிசெ. 15

பிரேசில் நாட்டின் சமூக வலைத்தள பிரப லமாக திகழ்ந்தவர் 19 வய தான மரியா சோபியா வலிம்.

இவர் இன்ஸ்டாகிராம் பக்கத்தில் அவருடைய உடற்பயிற்சி, தோல் தொடர்பான அழகு குறிப்புகள் போன்றவற்றை பதிவு செய்து பிரபலமானார்.

மேலும், தனக்கு ஆர்வமுள்ள உயர்தர பொருட்கள் குறித்தும் வெளிப்படுத்துவார்.

அவரை சுமார் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்டோர் இன்ஸ்டாகிராமில் பின்தொடர்ந்து வருகின்றனர்.

19 வயதான மரியா சோபியாவுக்கு திடீரென உடல் நலக்குறைவு ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக கல்லீரல் மாற்று அறுவைச் சிகிச்சை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அவருக்கு கல்லீரல் வழங்க கொடையாளர் சம்மதம் தெரிவித்து அறுவைச் சிகிச்சையும் வெற்றிகரமாக முடிந்துள்ளது.

ஆனால் அறுவைச் சிகிச்சை முடிந்த 48 மணி நேரத்திற்குள் அவர் உயிரிழந்துள்ளார்.

சோபியா மரணம் அடைந்த தகவலை அவரது தந்தை உறுதிப்படுத்தியுள்ளார்.

19 வயதில் மரணம் அடைந்த நிலையில், சமூக வலைத்தளத்தில் அவரை பின்தொடர்ந்தவர்கள் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்து வருகின்றனர். (அ)

# சர்வதேச நாடுகளின் ஆதரவு இல்லாவிடினும் போர் நடக்கும்

## இஸ்ரேல் திட்டவட்டம்

டெல் அவிவ், டிசெ. 15

சர்வதேச நாடுகளின் ஆதரவு இருந்தாலும் இல்லாவிட்டாலும் போர் தொடரும் என இஸ்ரேல் வெளியுறவுத்துறை அமைச்சர் எலி கோஹன் தெரிவித்தார்.

ஐ.நா. சபையில் முன்வைக் கப்பட்ட போர் நிறுத்த தீர்மா னம் பெரும்பான்மை ஆதரவுடன் நிறை வேற்றப்பட்டதை தொடர்ந்தே அவர் இவ்வாறு கூறினார்.

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் அமைப்பினருக்கு இடையிலான போர் சுமார் 3 மாத காலமாக நீடிக் கும் நிலையில் இந்தப் போரில் ஆரம்பத்திலிருந்தே இஸ்ரேலுக்கு அமெரிக்கா ஆதரவளித்து வரு கின்றது.

அதேநேரம் பலஸ்தீன மக்கள் மனிதாபிமான உதவிகள் இன்றி பாரிய நெருக்கடிகளை சந்தித்து வருகின்றனர். இந்தநிலையில் உலக நாடுகள் போர் நிறுத்தம் அமுல் படுத்தப்படவேண்டும் என வலியுறுத்திவருகின்றன.

இதற்கமைவாக ஐ.நா. சபையில் முன்வைக்கப்பட்ட தீர்மானத்திற்கு 153 நாடுகள் பொர் நிறுத்தத்திற்கு ஆதரவு தெரிவித்து வாக்களித்தன.

போர் நிறுத்தத்திற்கு அமெரிக்கா எதிர்ப்பு தெரிவிக்கின்ற போதிலும் உலக நாடுகள் போர் நிறுத்தத்திற்கு ஆதரவளித்து அழுத்தம் கொடுத்து வருகின்றன.

இந்தநிலையில் சார்வதேச நாடு களின் ஆதரவு இருந்தாலும் இல்லா



விட்டாலும் போர் தொடரும் என இஸ்ரேல் வெளியுறவுத்துறை அமைச்சர் எலி கோஹன் தெரிவித் தார்.

தற்போதைய நிலையில் போர் நிறுத்தம் அமுல்ப்படுத்தப்பட்டால் அது ஹமாஜட பயங்கரவாத அமைப்பினருக்கு பரிசாக அமைந்து விடும் என்றும் அவர்கள் மீண்டும் இஸ்ரேல் மக்களுக்கு மிரட்டல் விடுவதற்கு அனுமதி வழங்கியது போன்றாகிவிடும் என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

# இங்கிலாந்தில் புகைத்தல் வீழ்ச்சி!

லண்டன், டிசெ. 15

இங்கிலாந்தில் பல தசாப்தங்களாக புகைப்பிடிப் பதில் ஏற்பட்ட சரிவு, தொற்றுநோய்க்குப் பிறகு கிட்டத்தட்ட நிறுத்தப்பட்டுவிட்டது என்று ஒரு ஆய்வு தெரிவிக்கிறது.

தொற்றுநோய்க்கு முந்தைய ஆண்டுகளில் 5.2 சதவீதமாக இருந்த சரிவு வீதம், 2020ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் மற்றும் 2022ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதத்திற்கு இடையில், 0.3 சதவீதமாக குறைந் துள்ளது என்று ஆராய்ச்சி கூறுகிறது.

மக்கள் தொகையில் 101,960 வயது வந்தோருடன் நடத்தப்பட்ட கணக்கெடுப்புகளின் அடிப்படை யில், ஜூன் 2017இல் 16.2 சதவீதம் புகைப்பிடித் ததாக மதிப்பிட்டுள்ளனர். இது 2020ஆம் ஆண்டு மார்ச் மாதம், தொற்றுநோய்களின் தொடக்கத்தில் 15.1 சதவீதமாக குறைந்துள்ளது, ஆனால் 2022ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 15சதவீதமாகக் குறைந்துள் ளது. 2000ஆம் மற்றும் 2020ஆம் ஆண்டுகளுக்கு இடையில் புகைபிடிப்பதில் ஆண்டுக்கு ஆண்டு சரிவை தேசிய புள்ளிவிவரங்களுக்கான அலுவலகம் காட்டுகிறது.

2019ஆம் ஆண்டில், அரசாங்கம் 2030ஆம் ஆண் டிற்குள் சட்டப்பூர்வ வயதை உயர்த்துவது உட்பட இங்கிலாந்தை புகைப்பிடிக்காத நாடாக மாற்ற நட வடிக்கை எடுப்பதாக அரசாங்கம் உறுதியளித்தது.

ஆனால், லண்டன் யுனிவர்சிற்றி கொலேஜின் ஆராய்ச்சியாளர்கள், இந்த இலக்கை எட்டுவது கடினம் என்ற போதிலும் புகைப்பிடித்தலுக்கு எதி ரான முயற்சிகளை மறுபடியும் செய்யுமாறும் அரசாங்கத்தை வலியுறுத்துகின்றனர். (அ)



# பிரிட்டனை அச்சுறுத்தும் 100 நாள் இருமல் தொற்று!

கொழும்பு, டிசெ. 15

'100-டே கோஜ்' எனப்படும் புதிய பக்றீரியாத் தொற்றானது பிரித்தானியா முழுவதும் தீவிரமாகப் பரவிவருவதாக சுகாதார நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

விஞ்ஞான ரீதியாக கக்குவான் என அழைக்கப்படும் குறித்த தொற்றானது போர்ட்டெல்லா பெர்டுசிஸ் என்ற பக்றீரியாவால் காற்றுவழியாக பரவுவதாகவும், இத்தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆரம்ப அறிகுறிகளாக சளி, காய்ச்சல் மற்றும் லேசான இருமல் காணப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த தொற்றுக் காரணமாக தொடர்சியான இருமல் ஏற்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதோடு, சுமார் 100 நாட்கள் அல்லது 10 வாரங்கள் வரை இந்த தொடர்சியான இருமல் காணப்படும் எனவும், நோய் பாதிப்பு தீவிரமடையும் வாந்தி, சோர்வு, மற்றும் போது விலா எலும்புகள் உடையும் அளவு வலி ஏற்படலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த தொற்றுப் பரவலானது தீவிரமடைந்து வரும் நிலையில் பிரித்தானிய மக்களை அவதானமாக இருக்குமாறும், முகக் கவசங்களைப் பயன்படுத்துமாறும் வைத்தியர்கள் தெரிவித்துள் ளனர்.

# தனது கல்லறைக்கான இடத்தை அறிவித்த பாப்பரசர் பிரான்சிஸ்

ரோம், டிசெ. 15

பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் தனது கல்லறை அமைக்கப்பட வேண்டிய இடம் எது என்பதை அறிவிக் கும் விதமாக, "ரோம் நகரில் உள்ள சான்டா மரியா மேகியோர் பசிலிக்காவில் எனது உடல் அடக்கம் செய்யப்பட வேண்டும் என விரும்புகிறேன்" என நேற்று முன் தினம் மெக்சிக்கோ ஒளிபரப்பான என், ஸ்ட்ரீமிங் சேவைக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

வத்திக்கான் அதிகாரபூர்வ ஊடக தகவலின்படி, இதுவரை பரிசுத்த பாப்பரசர் பதவி வகித்த 7 பேரின் கல்லறைகள் வத்திக்கான் நகரில் உள்ள செயின்ட் பீற்றர்ஸ் பசிலிக்காவிலேயே கட்டப்பட்டுள்ளன.

ஆனால், அங்கு தனக்கான கல்லறை அமைக்கப்பட விரும்பாமல், சான்டா மரியா மேகியார் பசிலிக்காவில் தனது கல்லறை அமைக்கப்பட வேண்டும் என தான் விரும்புவதாக 87 வயதான பரிசுத்த பாப்பரசர் பிரான் சிஸ் கூறியிருப்பது பலரை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள் ளது.

பாப்பரசர் பிரான்சிஸ் அந்த பேட்டியில், ரோமில் உள்ள நான்கு போப்பாண்டவர் தேவாலயங்களில் சான்டா மரியா மேகியோர் தேவாலயமும் (பசிலிக்கா) ஒன்று. இந்த தேவாலயத்துக்கும் தனக்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருப்பதாக உணர்வதாகவும் கூறியுள்ளார்.

தான் பாப்பரசர் பதவியில் அமர்வதற்கு முன்னர் ரோம் நகருக்கு செல்கிற போதெல்லாம், வார இறுதி நாட்களில் சான்டா மரியா மேகியோர் தேவாலயத் துக்குச் செல்வதை வழக்கமாக கொண்டிருந்ததாகவும் இதன்போது தெரிவித்தார்.

அத்துடன், 2013இல் இவர் பாப்பரசர் பதவியை அடைந்த பின்னரும் இந்த தேவாலயத்துக்குச் சென்று வழிபட்டுள்ளதாகவும், தனக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்ட பின்னரும் கூட சான்டா மரியா மேகி யோர் தேவாலயத்தில் வழிபட்டதாகவும் உணர்வு மேலிட பேட்டியில் குறிப்பிட்டார் பாப்பரசர்.

பாப்பரசரின் கல்லறை பற்றிய இந்த அறிவிப்பின்படி, நூறாண்டுகளுக்குப் பின்னர், வத்திக்கான் நகருக்கு வெளியே அடக்கம் செய்யப்படும் முதல் பாப்பரசர் இவர் என்பது வரலாற்றுப் பதிவாகிறது.

நூறாண்டுகளுக்கு முன்னர் பாப்பரசர் 8ஆம் லியோ 1903 இல் வத்திக்கான் செயின்ட் பீட்டர்ஸ் பசிலிக்கா வில் அல்லாமல், நகருக்கு வெளியே, ரோமில் உள்ள சென். ஜோன் பசிலிக்காவில் அடக்கம் செய்யப்பட் டமை குறிப்பிடத்தக்கது. (அ)



# அடுத்த தலைமுறை ஸ்டெல்த் விமானம் உருவாக்க ஜப்பான் - இத்தாலியுடன் பிரித்தானியா ஒப்பந்தம்!

ரோக்கியோ, டிசெ. 15

அடுத்த தலைமுறை ஸ்டெல்த் போர் விமானத்தை உருவாக்க ஜப்பான் மற்றும் இத்தாலியுடன் பிரித்தானியா சர்வதேச ஒப்பந்தத் தில் கையெழுத்திட்டுள்ளது.

ரோக்கியோவில் நேற்று ஒப் பந்தம் கையெழுத்தானது. இது போர் விமானத்தின் வளர்ச்சியில் ஒரு முக்கிய கட்டத்தை குறிக்கிறது என்று பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

பாதுகாப்புச் செயலர் கிராண்ட் ஷாப்ஸ், ஜப்பானிய தலைநகரில் தனது இத்தாலிய மற்றும் ஜப்பா



னிய சகாக்களான கைடோ க்ரோ செட்டோ மற்றும் மினோரு கிஹாரா ஆகியோருடன் ஆவணத்தில் கையெழுத்திட்டார்.

'எங்கள் உலகின் முன்னணி போர் விமானத் திட்டம் உலகளா விய பாதுகாப்பிற்கு முக்கியமான தாக இருப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது, மேலும் 2035 ஆம் ஆண்டில் அந்தந்த விமானப்படை களுக்கு புதிய ஜெட் விமானங்களை வழங்குவதில் நாங்கள் தொடர்ந்து முன்னேறுவோம்' என பாதுகாப்பு செயலர் கிராண்ட் ஷாப்ஸ், கூறி னார்.

சூப்பர்சோனிக் திறன் மற்றும் அதிநவீன தொழில்நுட்பத்துடன் ராணுவ விமானங்களை உருவாக் வதற்கான கூட்டு சர்வதேச முயற் சியை பிரதமர் ரிஷி சுனக் ஓராண் டுக்கு முன்பு அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# சீனாவுக்காக இந்தியாவின் உறவை முறித்துக்கொள்ளப் போகிறீர்களா?

## சபையில் கோவிந்தன் கருணாகரம் கேள்வி

கொழும்பு, டிசெ. 15

**இந்திய, சீன உறவில் உண்மையான நண்பன் யார் என்பதை இலங்கை கற்றுக்கொள்ள வேண்டும். நமது அயல் நாடான இந்தியாவை உதட்டளவில் புகழ்ந்து உள்ளத்தின் ஊடாக சீண்டுவதனை தவிர்க்க வேண்டும். இங்கு பெருமைப்படும் பௌத்த மதமும் பாளி மொழியும், பௌத்த இலக்கியங்களும் இந்தியாவிலே தோற்றம் பெற்றன. இத்தகைய வரலாற்று தொடர்புகளை சீனாவுக்காக அறுக்கப் போகின்றீர்களா என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் கேள்வியெழுப்பினார்.**

பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டத்தில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு அமைச்சு ஆகியவற்றுக்கான செலவுத்தலைப்புக்கள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் சீன எக்சிம் வங்கி எமக்கு உதவுகின்றது. சர்வதேச கடன் மறுசீரமைப்பில் கை கொடுக்கின்றது என்று குறிப்பிடப்படுகிறது.

சீன கடன்மறுசீரமைப்பு தொடர்பில் சீனாவின் வரையறைகள் என்னவென்பதை இந்த சபையில் சமர்ப்பிக்க வேண்டியது அரசாங்கத்தின் தார்மீகக் கடமை.

அதுமாத்திரமன்றி கடன்மறுசீரமைப்பு, சீனாவின் கொள்கை தொடர்பாக அரசாங்கம் வெளிப்படைத் தன்மையுடன் செயற்பட வேண்டும்.

சீனா தொடர்பாக உரையாற்றும்போது இந்தியா தொடர்பிலும் உரையாற்ற வேண்டியது கட்டாயம். இந்தியா என்று நாங்கள் பேசினால் இங்குள்ள சிலருக்கு அது கசக்கும்.

இந்தியா எனக்கொன்றும் இனிப்பல்ல. ஆனால் யதார்த்தம் புரிய வேண்டியது அவசியம். பொருளாதார சிக்கலில் நாம் மூழ்கியிருந்த போது நான்கு பில்லியன் அமெரிக்க டொலர்களை அத்தியாவசிய மருந்து, எரிபொருட்களுக்காக எந்தவொரு நிபந்தனையுமின்றி இந்தியா வழங்கியது.

ஆனால் அந்த வேளையில் சர்வதேச நாணய நிதியம் கூட 2.9 பில்லியன் டொலர்களை பல்வேறு நிபந்தனைகளுடன் தான் வழங்கியது நான் ஒன்றும் இந்திய ஆதரவாளன் அல்லன்.

ஆபத்தில் கை கொடுப்பவனே நண்பன். ஆபத்து நேரத்தில் உதவுவதுபோல் தனது நலனை நிறைவேற்ற நினைப்பவன் நண்பனல்ல. இந்திய,சீன உறவு தொடர்பாக இலங்கை கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் இது .நமது அயல் நாடான இந்தியாவை உதட்டளவில் புகழ்ந்து உள்ளத்தின் ஊடாக சீண்டுவதனை நாம் தவிர்க்க வேண்டும்.நமது கடன் மறுசீரமைப்பு தொடர்பாக எமக்கு உற்ற நண்பனாக விளங்குவது இந்தியா மாத்திரமே .

அண்மைக்காலமாக எமது நாட்டின் வெளியுறவுக் கொள்கையிலும் மாற்றங்களை அவதானிக்கின்றோம். இது நமது தேசிய கொள்கைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும். அண்மைய நாட்களில் சீன பாதுகாப்புத்துறை தொடர்பான உளவுக் கப்பல்கள் இந்து சமுத்திரத்தில் சஞ்சரிப்பதும் நமது கடலில் பல்வேறு ஆய்வுகளை மேற்கொள்ள வருகை தெரிவதாக கூறுவதும் அதற்கு எமது நாடு செங்கம்பளம் விரித்து வரவேற்பதும் வழமையான நிகழ்வாகிவிட்டன. எமது வெளிநாட்டுக் கொள்கை சீனாவுடன் எதிர்ப்பாக இருக்க வேண்டும் என்பதல்ல. எமது சீன சார்பு என்பது இந்து சமுத்திரத்தின் தெற்காசிய நாடுகளின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருப்பதற்கு நமது நாடு காரணமாகிவிடக்கூடாது.

சீனாவை விட இந்தியா எமது நட்பு நாடு. பௌத்த, இந்து மக்களின் ஆணிவேரின் மூலம் இந்தியாவே பாரம்பரிய கலாசார தொடர்புகள் மட்டுமல்ல இங்கு நீங்கள் பெருமைப்படும் பௌத்த மதமும் பாளி மொழி இந்தியாவில் தான் தோன்றியது. பௌத்த இலக்கியங்கள் தோற்றம் பெற்றதும் இந்தியாவில்தான். இத்தகைய வரலாற்று தொடர்புகளை சீனாவுக்காக அறுக்க கொள்ளப் போகின்றீர்களா ?-என்றார்.(அ)

# மொனராகலையில் விவசாயி எலிக்காய்ச்சலால் உயிரிழப்பு

கொழும்பு, டிசெ. 15

தற்போது நிலவும் உசிதமற்ற காலநிலையால் மொனராகல மாவட்டத்தைச் சேர்ந்த கொவிந்துபுர பிரதேச நான்கு பிள்ளைகளின் தந்தையான 73 வயதுடைய களுவாகே றொபின் என்ற விவசாயி உயிரிழந்துள்ளார்.

வயல்நிலங்களில் வேலை செய்வோருக்கு ஏற்படக்கூடிய இந்நோயினால் இம் மாவட்டத்தில் மேலும் பலர் பாதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

எலிக்காய்ச்சல் நோய் அடையாளம் காணப்பட்ட மேற்படி விவசாயி சியம்பலாண்டுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மொனராகல பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையிலேயே சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (அ)

# நிறைவேற்றப்பட்ட பட்ஜெட் சபாநாயகர் ஒப்பமிட்டார்!

கொழும்பு, டிசெ. 14

பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் நிறைவேற்றப்பட்ட 2024ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தில் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன தனது கையொப்பமிட்டு சான்றுரைப்படுத்தினார்.

அத்துடன் கடந்த 11ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டமூலம் மற்றும் நிதிச் சட்டமூலம் என்பவற்றையும் சபாநாயகர் நேற்று முன் தினம் உறுதிப்படுத்தினார்.

இதற்கமைய, இந்தச் சட்டமூலங்கள் 2023ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சேர்பெறுமதி வரி (திருத்த) சட்டமாகவும், 2023ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க நிதிச் சட்டமூலமாகவும் 2023ஆம் ஆண்டின் 34ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டமாகவும் நேற்று முன் தினம் முதல் நடைமுறைக்கு வந்தன. (ஐ)

# டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு!

கொழும்பு, டிசெ. 15

நாடளாவிய ரீதியில் நிலவும் மழையுடனான காலநிலை காரணமாக பல பிரதேசங்களில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

காலி, பதுளை, குருநாகல் மற்றும் புத்தளம் ஆகிய பகுதிகளில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவின் பணிப்பாளர், விசேட வைத்திய நிபுணர் நளின் ஆரியரத்ன தெரிவித்தார்.

இதன்படி இந்த ஆண்டில் இதுவரை நாடளாவிய ரீதியில் பதிவான டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 80 ஆயிரத்தைக் கடந்துள்ளது.

அவர்களில் பெரும்பாலானவர்கள் மேல் மாகாணத்தில் இருந்து பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

# பஸ் கட்டணத்தில் ஜனவரி திருத்தம்?

கொழும்பு, டிசெ. 15

வற் வரி அதிகரிப்புடன், ஜனவரி மாதத்தில் பஸ் கட்டணத்தில் திருத்தம் மேற்கொள்ளப்படலாம் என இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

எனவே, இது தொடர்பாக எதிர்காலத்தில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடவுள்ளதாக அச்சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனவரி மாதம் முதல் பஸ்கள் இறக்குமதியின் போது, சராசரியாக பஸ் ஒன்றின் விலை ஒரு கோடியே 57 இலட்சமாக உள்ளது.

வற் வரியின் 18 சதவீத அதிகரிப்புடன், குறைந்தபட்சம் 20 இலட்சம் ரூபாய் விலையுடன் இந்த அதிகரிப்பு ஏற்படும்.

அத்துடன், உதிரிப் பாகங்களின் விலை, எண்ணெய் விலை, சேவைக் கட்டணங்கள் அனைத்தும் அதிகரிக்கின்றன. எரிபொருளின் மீது வற் வரி அறவிடப்படவுள்ளது.

இதனால், டீசலின் விலையும் அதிகரிக்கும் என்பதால் மீண்டும் ஒருமுறை பஸ் கட்டணத்தை அதிகரிக்க வேண்டிய நிலை உள்ளது.

இதனால், விரைவில் ஜனாதிபதி மற்றும் நிதி அமைச்சின் அதிகாரிகளுடன் இது குறித்து கலந்துரையாடவுள்ளோம்-என்றார்.

இதேவேளை, நிழற்படப் பிரிதிகளின் விலைகளில் அதிகரிப்பு ஏற்படும் என அகில இலங்கை தொடர்பாடல் வர்த்தக நிலைய உரிமையாளர்கள் சங்கமும் தெரிவித்துள்ளது.

வற் வரி அதிகரிப்பின் காரணமாக இந்த நிலை ஏற்படும் எனவும், இதனால், தாம் தொழில் நெருக்கடிக்கு முகங்கொடுக்க நேரிடும் எனவும் அந்த சங்கம் கவலை வெளியிட்டுள்ளது.

நிழற்படப் பிரிதிகளின் விலைகளில் அதிகரிப்பு ஏற்படும் நிலையில் அது மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளைப் பாதிக்கும் எனவும் அகில இலங்கை தொடர்பாடல் வர்த்தக நிலைய உரிமையாளர்கள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

# பல நிறுவனங்கள் விரைவில் மீண்டும் இலங்கையில் முதலீடு மேற்கொள்ளும்

## மனுஷ நாணயக்கார நம்பிக்கை

கொழும்பு, டிசெ. 15

இலங்கையின் வங்குரோத்து நிலை காரணமாக முதலீடுகளை இலங்கையில் மேற்கொள்ள விரும்பாத பல நிறுவனங்கள் விரைவில் மீண்டும் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ளும். இதனால் வீழ்ச்சியடைந்துள்ள கட்டுமானத் துறை எதிர்வரும் சில மாதங்களில் புத்தெழுச்சி பெறும் என்று தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

கைவிடப்பட்டிருந்த ஜப்பான் இலகு ரயில் சேவைத்திட்டம், இடை நிறுத்தப்பட்டிருந்த விமான நிலைய கட்டட வேலைத்திட்டம் முதலானவை மீண்டும் ஆரம்பமாகவுள்ளன. சர்வதேச நாணய நிதியத்தின் கடன் உதவியும் கிடைக்கும். கட்டுமானத் தொழில் துறையில் ஈடுபட்டுள்ளோர் இதன் மூலம் பயனடைவார்கள் என்றும் அமைச்சர் கூறினார்.

எனவே, இத்துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் தொழில் கௌரவத்துடன் தமது தொழிலை அமைப்பு ரீதியில் மேம்படுத்திக்கொண்டால், இந்தியா, சீனா போன்ற நாடுகளில் இருந்து இலங்கைக்கு வரும் தொழிலாளர்களை உங்களது அங்கீகாரமின்றி அனுமதிக்க முடியாத நிலை ஏற்படும் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இஸ்ரேலில் பத்தாயிரம் தொழில்வாய்ப்புகளுக்கு மேலதிகமாக கட்டுமானத்துறையில் புதிதாக 20 ஆயிரம் தொழில் வாய்ப்புக்கள் கிடைக்கவிருப்பதாகவும் ,இது தொடர்பான பேச்சுவார்த்தை இஸ்ரேலுடன் நடத்தப்பட்டுவருவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

# மின் விநியோகம் தடைப்பட்டமையால் 2 எம்.ஆர்.ஐ. இயந்திரங்கள் செயலிழப்பு

கொழும்பு, டிசெ. 15

நாட்டில் கடந்த சனிக்கிழமை மின் விநியோகம் திடீரென தடைப்பட்டதால், கொழும்பு தேசிய வைத்தியசாலையின் இரண்டு எம்.ஆர்.ஐ இயந்திரங்கள் செயலிழந்துள்ளதாக நிறைவுகாண் மருத்துவ ஊழியர்களின் கூட்டு ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக வைத்திய பரிசோதனைகளை மேற்கொள்வதில் இடையூறு ஏற்பட்டுள்ளதாக அதன் செயலாளர் சானக்க தர்மவிக்ரம தெரிவித்தார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் தற்போது இரண்டு எம்.ஆர்.ஐ இயந்திரங்கள் மாத்திரமே செயற்பாட்டு நிலையிலுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

அந்த இயந்திரங்களை திருத்துவதற்கு விரைவில் நடவடிக்கை எடுப்பதாக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் ருக்ஷான் பெல்லன தெரிவித்துள்ளார்.

## நகர...

சேனாதிராயன் தோம்பு பகுதிகளே இவ்வாறு அளவீடு செய்யப்படவுள்ளன. இந்த நில அளவீடு இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

உயர் பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் அமைந்துள்ள ஜனாதிபதி மாளிகை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் காலத்தில் தனியார் காணிகளையும் உள்ளடக்கி அமைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-01)

## பகுப்பாய்வு...

மீட்கப்பட்ட 40 மனித எச்சங்களின் வயது மற்றும் பாலினம் தொடர்பில் எதிர்வரும் 21 மற்றும் 22ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் பகுப்பாய்வு முன்னெடுக்கப்படவுள்ளது.

இதேசமயம், திட்டமிட்டவாறு எதிர்வரும் மார்ச் முதலாம் திகதி மீண்டும் புதைகுழியின் அகழ்வு பணிகளை முன்னெடுப்பது தொடர்பில் பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி நடைபெறவுள்ள வழக்கு விசாரணையின்போது அறிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-10)

## இலங்கை...

அவருடன் அவரது கணவர் வைஸ் அட்மிரல் சர் டிம் லாரன் ஸூம் இலங்கை வரவுள்ளார்.

இலங்கை - இங்கிலாந்து இடையிலான இராஜதந்திர உறவுகளின் 75 ஆவது ஆண்டு நிறைவு விழாவுடன் தொடர்புடைய நிகழ்வுகளில் பங்கேற்குமாறு அரசாங்கம் விடுத்த அழைப்பின் பேரிலேயே இளவரசி ஆன் இலங்கை வரவுள்ளார்.

இளவரசி ஆன் எலிசபெத், இரண்டாம் எலிசபெத் இளவரசி மற்றும் எடின்பேர்க் இளவரசர் பிலிப் ஆகியோருக்கு பிறந்த இரண்டாவது குழந்தை. அத்துடன், அவர்களின் ஒரே மகள் மற்றும் மூன்றாம் சார்ள்ஸ் மன்னரின் சகோதரியும் ஆவார்.

இளவரசி ஆன் எலிசபெத் தனது இலங்கை பயணத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஸ் குணவர்த்தன உட்பட அரசாங்கத்தின் உயர் மட்ட உறுப்பினர்களை சந்திக்கவுள்ளார். (ஐ)

## மகிந்தவிடம்...

கோட்டாபய ராஜபக்ஷ இல்லை என்பதற்காக நாங்கள் அரசியலில் ஈடுபடக்கூடாது என்பதொன்றும் கட்டாயமல்ல.

பொதுஜன பெரமுனவின் இரண்டாவது தேசிய மாநாடு கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் நாளை (இன்று) வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. ராஜபக்ஷர்களின் மீளெழுச்சியை கண்டு எதிர்க்கட்சியினர் அச்சமடைந்துள்ளார்கள். சமூக வலைதளங்களில் வெறுக்கத்தக்க வகையில் பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷமீது நாட்டு மக்கள் இன்றும் நம்பிக்கை கொண்டுள்ளார்கள். அவரின் தலைமையிலான அரசாங்கத்தை கோருகிறார்கள். நாளைய (இன்றைய) தேசிய மாநாட்டில் அவர் முக்கிய செய்தியை நாட்டு மக்களுக்கு வழங்குவார்.

அறகலய என்று கூறிக்கொண்டு தோற்றம் பெற்ற போராட்டத்தை அடக்குவதில் கோட்டாபய ராஜபக்ஷ தோல்வியடைந்தார். அதனால்தான் பெரும் நெருக்கடிகள் தோற்றம் பெற்றன. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க போராட்டத்தை சிறந்த முறையில் அடக்கினார்.

நாட்டு மக்களை மென்மேலும் நெருக்கடிக்கு உள்ளாக்கும் வகையில் வற் வரி அதிகரிக்கப்பட்டுள்ளமை முறையற்றதாகும். ஜனாதிபதியின் வரி விதிப்பு கொள்கைக்கு துணை போகக்கூடாது என்பதற்காக வற் வரி மீதான வாக்கெடுப்பில் நான் கலந்து கொள்ளவில்லை - என்றார். (ஐ)

## வடக்கு...

பகுதிகளில் மிகக் கனமழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

இக் கனமழை காரணமாக வடக்கு, கிழக்கு மாகாணங்களின் தாழ்நில பகுதிகளில் வெள்ள அனர்த்தத்துக்கான வாய்ப்புகள் உள்ளன. குறிப்பாக யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களின் பெரும்பாலான பகுதிகளில் மிகக் கன மழைக்கு வாய்ப்புள்ளது.

இந்த மழை இன்று வெள்ளிக்கிழமை முதல் எதிவரும் 22ஆம் திகதி வரை தொடர்வதற்கான வாய்ப்புள்ளது. மேற்குறிப்பிட்ட மாவட்டங்களின் தாழ்நில பகுதிகளில் உள்ள மக்கள் இந்தக் கன மழை காரணமாக ஏற்படக்கூடிய வெள்ள அனர்த்தம் தொடர்பில் அவதானமாக இருப்பது அவசியம் - என்றுள்ளது. (ஐ)

## எரிவாயுவின்...

தற்போது 3 ஆயிரத்து 565 ரூபாயாக (கொழும்பு விலை- மாவட்டத்துக்கு ஏற்ப விலை மாற்றம் உள்ளது) 12.5 கிலோ எடை கொண்ட எரி வாயு 640 ரூபாயால் அதிகரிக்கும் - என்றும் அவர் தெரிவித்தார்.

## கைப்பேசிகளின்...

இது தொடர்பில் இலங்கை கைபேசி விற்பனை நிலைய உரிமையாளர்கள் சங்க தலைவர் இந்திரஜித் பெரேரா தெரிவிக்கையில் ,

அதிகரிக்கப்படும் பொருட்களின் விலைகள் தொடர்பில் இலங்கை கைபேசி விற்பனை நிலைய உரிமையாளர்கள் சங்கம் தீர்மானிக்க முடியாது. கைபேசிகள், கைபேசி துணை பாகங்களான சார்ஜர்கள், கேபிள்கள், கவர்கள், டிஸ்பிளே, ரெம்பேரட் போன்றவற்றின் விலை அதிகரிக்கப்படுவதால் நுகர்வோர் மாத்திரம் அல்ல விற்பனையாளர்களும் பாதிக்கப்படுகின்றனர்.

இந்த காலகட்டத்தில் கைபேசிகள் அடிப்படை தேவையாக மாறிவிட்டதோடு அதன் துணைக் கருவிகள் மற்றும் பாகங்கள் முக்கியமான பொருட்களாக காணப்படுகின்றன. கைபேசிகளின் விலை உயர்வுக்கு பின்னர் பாடசாலை பொருட்களின் விலையும் அதிகரிக்கப்படும் இதனால் கல்வித்துறையும் பாதிக்கப்படும் - என்றார். (ஐ)

## யாழ்...

சேகரிக்கப்படும் கையெழுத்துகள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்பி வைக்கப்படவுள்ளன என்று கடற்றொழிலாளர் அமைப்பின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

வரைவு கடற்றொழில் சட்டத்தை நிராகரித்தல், வெளிநாட்டு கடற்றொழில் கப்பல்களுக்கு அனுமதிப் பத்திரம் வழங்குவதை எதிர்த்தல், கடல் உணவு இறக்குமதியை எதிர்த்தல், 2024 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டத்தில் கடற்றொழிலாளர்களுக்கு போதுமான ஒதுக்கீடு இன்மை மற்றும் இந்திய இழுவைமடி படகுகளால் பாதிக்கப்படும் கடற்றொழிலாளர்களுக்கு நியாயமான தீர்வுகளை பெற்றுத் தரவேண்டும் போன்ற ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து இந்தக் கையெழுத்து போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் கடற்றொழில் சமூகம் பெரிதும் பாதிப்படைந்துள்ளது. இந்த நிலையில், கடற்றொழில் சமூகத்தை தொடர்ந்தும் பாதிக்கும் அரச கொள்கைகளை கைவிடுமாறு கோரியும் மனு ஒன்றை அனுப்பவுள்ளதாகவும் கடற்றொழில் அமைப்பின் பிரதிநிதிகள் தெரிவித்தனர். (ஐ)

# ‘இமயமலை’ பிரகடனத்துடன் ஜனாதிபதி, எமக்கு தொடர்பில்லை!

**சுமந்திரன் எம். பி.**

கொழும்பு, டிசெ. 15

இமயமலை பிரகடனத்துக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலோ அல்லது அந்தப் பிரகடனத்துக்கும் எமக்கும் இடையிலோ எவ்வித தொடர்புமில்லை என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

உலக தமிழர் பேரவை அனைவரும் சமமான உரிமைகளுடன் வாழக்கூடிய இலங்கை என்ற தொனிப் பொருளில் 6 முக்கிய அம்சங்களை அடிப்படையாக வைத்து உலக தமிழர் பேரவையும் பௌத்த தேரர்கள் குழுவும் இணைந்து இந்தப் பிரகடனத்தை உருவாக்கினர்.

இந்த நிலையில், இந்தப் பிரகடனம் அடுத்த ஆண்டு நடக்கும் பாராளுமன்ற தேர்தலில் தமது வாக்குவங்கியை பாதுகாக்கவும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அங்கீகாரம் அளிக்கவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் உருவாக்கப்பட்டது என்று கஜேந்திரகுமார் எம். பி. சாடியிருந்தார்.

இந்த நிலையிலேயே “இந்தப் பிரகடனத்தும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் எவ்வித தொடர்புமில்லை. அதேபோல் இதில் எமக்கும் எந்தவொரு தொடர்புமில்லை.

உலகத் தமிழர் பேரவையும் புத்த பிக்குகளும் இணைந்து நடத்திய பேச்சுகளின் நீட்சியாக, அதனை அடிப்படையாகக்கொண்டு தயாரிக்கப்பட்டதொரு செயல்திட்டமே இந்தப் பிரகடனமாகும்.

இதில் அதிகாரப்பகிர்வு மற்றும் பொறுப்புக்கூறல் ஆகிய விடயங்கள் மிகமுக்கியமாக வலியுறுத்தப்பட்டிருக்கின்றன. குறிப்பாக “ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரப் பகிர்வு“ என்ற சொற்பதம் புத்த பிக்குகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றது.

அதேபோன்று பொறுப்புக்கூறல் உறுதிப்படுத்தப்படவேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டிருக்கின்றது. இதுபற்றி மகாநாயக்க தேரர்களுடன் கலந்துரையாடப்பட்டிருப்பதுடன் அவர்களும் இதற்கு இணக்கம் தெரிவித்துள்ளனர்.

எனவே, அடுத்தகட்டமாக இப்பிரகடனம் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படும் என்பதிலேயே அதன் செயல்திறன் தங்கியுள்ளது.

இதேவேளை உலகத்தமிழர் பேரவை எம்முடன் நடத்திய சந்திப்பில் கட்சியின் சிரேஷ்ட தலைவர் இரா.சம்பந்தன் இப்பிரகடனத்தை வரவேற்று எமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியிருந்தார். இவற்றுக்கு அப்பால் எமக்கு இதில் எவ்வித தொடர்புமில்லை - என்றார்.(ஐ)

# வரவு - செலவு திட்டம் நிறைவேறியதால் மக்களை நினைத்து கவலையடைகிறேன்!

கொழும்பு, 15

வரவு - செலவு திட்டம் நிறைவேற்றப்பட்டதன் மூலம் மக்களுக்கு ஏற்படப்போகும் தலைவிதியை நினைத்து கவலையடைகிறேன். செல்வந்தர்களை மாத்திரம் போஷிக்கும் வரவு - செலவு திட்டமாகவே காண்கிறோம் என எதிர்க்கட்சித் தலைரவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பாராளுமன்றுக்கு வெளியே நேற்று முன்தினம் செய்தியாளர்களை சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசாங்கம் அடுத்த வருடத்துக்காக நிறைவேற்றியுள்ள வரவு - செலவு திட்டத்தில் சாதாரண மக்களுக்கு எந்த நன்மையும் இல்லை. இதனால் எதிர்வரும் காலங்களில் மக்களுக்கு ஏற்படப்போகும் தலைவிதியை நினைத்து கவலையடைகிறேன். வரவு செலவு திட்டத்தில் சமூகத்தில் எந்தத் தரப்புக்கும் எந்த நன்மையும் கிட்டாத நிலையில் செல்வந்தர்களை மாத்திரம் மேலும் போஷிக்கும் வகையிலேயே அமைந்துள்ளது.

சாதாரண மக்களைப் புறக்கணித்து பெரும் செல்வந்தர்களை போஷிக்கும் வரவு செலவுத் திட்டம் மூலம் சமூகத்தில் எந்தத் தரப்புக்கும் எந்த நன்மையும் கிட்டவில்லை. இதனை மிகவும் கீழ்தரமான வரவு - செலவு திட்டம் என தெரிவிக்கலாம்.

சர்வதேச நாணய நிதியத்தின் மூலம் இன்னும் 8 தவணைகளை பெறவேண்டும். தற்போது இரண்டாவது தவணை கிடைக்க இருப்பதாக ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

நாணய நிதியத்தின் இரண்டாம் கட்ட உதவியை பெற்றுக்கொள்ளவே மக்களின் மது பாரிய வரிசுமையை ஏற்படுத்தி இருக்கிறது. எனவே, இரண்டாம் தவணை கிடைத்தமைக்காக ஆரவாரப்பட்டு கொண்டாடக் கூடாது.

அத்துடன் ஊழலை எதிர்க்கும், ஊழலை இல்லாதொழிக்க முன்நிற்கும் நல்லாட்சிக்காக தயாராகும் எந்தவொரு நபருக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் கதவுகள் திறந்தே இருக்கும்.

ரொஷான் ரணசிங்கவுக்கு இருந்த அனைத்து அமைச்சுப் பதவிகளையும் சலுகைகளையும், வரப்பிரசாதங்களையும் மறந்து ஒரு கொள்கை ரீதியான முடிவை அணுகியே வரவு செலவு திட்டத்துக்கு எதிராக வாக்களித்திருந்தார் என்றே நினைக்கிறேன். - என்றார். (ஐ)

## இரணைமடு...

எனினும், மாலை நேரத்தின் பின்னர் 31.9 அடியை கடந்திருந்தது.

அதிகாலை 33 அடியை தொட்டுவிடும். அத்துடன், அதிக மழைவீழ்ச்சியும் எதிர்பார்க்கப்படுகிறது. இதனாலேயே குளத்தின் வான்கதவுகள் திறக்கப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## சைவத்தின்...

படுகின்றது. இந்த விடயம் தொடர்பிலேயே அவர் மேற்கண் டவாறு தெரிவித்தார்.

“யாழ்ப்பாணம் மாவட்டம், தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவில் நகுலேஸ்வரம், காங்கேசன்துறை கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கி மகிந்த ஆட்சிக் காலத்தில் அமைக்கப்பட்ட ஜனாதிபதி மாளிகையை தமிழ் மக்களின் எதிர்ப்பால் பயன்படுத்தாமல் தவிர்த்து வந்தனர். இருப்பினும், அதனை அண்டிய பகுதிகளை தொடர்ந்தும் ஆட்சி செய்யவும், தமக்கான நிதி ஈட்டலை தேடவும், தமிழர்களின் குறிப்பாக சைவ சமயத்தவர்களின் எதிர்ப்பை திசை திருப்பும் வகையிலும் அப்பகுதியை ஒரு தமிழரிடம் அதுவும் ஒரு சைவப் பெருமகனாரிடம் முதலீடு என்னும் பெயரில் வழங்கும் சூழ்ச்சி இடம்பெறுவதாகவே நாம் கருதுகின்றோம்.

எனவே, இப்பகுதியில் உள்ள 7 சைவ சின்னங்களும் விடுவிக்க நாம் எத்தனையோ முயற்சிகள் மேற்கொண்டும் இதுவரை நிறைவேறாத நிலையில் அப்பகுதிகளைப் பெற்று தொழில் புரிய எவர் முனைந்தாலோ அல்லது உறுதுணை புரிந்தாலோ அது சைவ சமயத்துக்கு செய்யும் பெரும் துரோகமாகவே நாம் பார்க்கின்றோம் எனப் பகிரங்க வெளியில் கூறி வைக்க விரும்புகின்றோம்.” - என்றார். (ஐ- 01)

ஈழநாடு
Eelanadu

# பொலிஸ்மா அதிபர் தென்னக்கோன் 5 இலட்சம் நட்டஈடு வழங்கவேண்டும்

## உயர்நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு, டிசெ. 15

**பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் மற்றும் மூன்று பொலிஸ் அதிகாரிகளை இவர்களால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு நட்டஈடு வழங்குமாறு உயர் நீதிமன்றம் நேற்று வியாழக்கிழமை உத்தரவிட்டுள்ளது.**

ஒரு தனிநபரின் அடிப்படை உரிமைகளை மீறியதற்காக அவர்களின் தனிப்பட்ட நிதியிலிருந்து தலா 5 இலட்சம் ரூபாவை நட்டஈடாகச் செலுத்துமாறு உத்தரவிட்டுள்ளது.

மிரிஹான பொலிஸ் நிலையத்தில் ஒருவர் தடுத்து வைக்கப்பட்டிருந்த சம்பவம் தொடர்பான விசராணையின்போதே இந்த தீர்ப்பு வழங்கப்பட்டது.

இதேவேளை, மனுதாரருக்கு 100,000 ரூபா இழப்பீடு வழங்கவும் அரசுக்கு உத்தரவிடப்பட்டது.

மனுதாரரன டபிள்யூ. ரஞ்சித் சுமங்கல என்பவரை சட்ட விரோதமாக கைது செய்து, தடுத்துவைத்து, சித்திரவதைக்கு உட்படுத்தியதன் மூலம், தேசபந்து தென்னக்கோனின் மேற்பார்வையின் கீழ் இருந்த மிரிஹான பொலிஸ் நிலையத்தில் அவரது அடிப்படை உரிமைகளை மீறப்பட்டுள்ளதாக உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் உட்பட நான்கு பொலிஸ் அதிகாரிகளையே இவ்வாறு நட்டஈடு வழங்கவேண்டுமென உத்தரவிடப்பட்டுள்ளது.

தேசபந்து தென்னக்கோன் உட்பட அனைத்து பொலிஸ் அதிகாரிகளுக்கும் எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு தேசிய பொலிஸ் ஆணைக்குழு உள்ளிட்ட அதிகாரிகளுக்கு உயர் நீதிமன்றம் மேலும் உத்தரவிட்டுள்ளது. (அ)

# வெளிநாட்டுத் தூதுவர்களிடமும் இமயமலை பிரகடனம் கையளிப்பு



கொழும்பு, டிசெ. 15

உலகத் தமிழர் பேரவையின் உறுப்பினர்கள் மற்றும் சிறந்த இலங்கைக்கான சங்க ஒன்றியத்தின் தேரர்கள் ஆகியோர் இலங்கைக்கான வெளிநாட்டுத் தூதுவர்களைக் கொழும்பில் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர், பிரிட்டன் தூதுவர் மற்றும் சுவிற்சர்லாந்து தூதுவர் ஆகியோர்களை அவர்கள் சந்தித்து தமது வேலைத்திட்டம் தொடர்பில் தெளிவுபடுத்தியுள்ளனர்.

நேற்று முன் தினம் இடம்பெற்ற இந்தச் சந்திப்பின்போது இலங்கையில் இன நல்லிணக்கத்துக்கான இமயமலைப் பிரகடனத்தையும் தூதுவர்களிடம் அவர்கள் கையளித்துள்ளனர். (அ)

# மருந்து கட்டுப்பாட்டு அதிகாரசபைக்கு சுகாதார அமைச்சர் திடீரென விஜயம்!

கொழும்பு, டிசெ. 15

தேசிய மருந்து கட்டுப்பாட்டு அதிகாரசபை மற்றும் தேசிய மருந்து தர பாதுகாப்பு ஆணையகம் என்பவற்றை கண்காணிப்பதற்காக சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண திடீர் விஜயமொன்றை மேற்கொண்டார்.

இதன்போது பௌதீக மற்றும் மனித வளங்களை மேம்படுத்துவதற்காக துரித நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் அமைச்சர் ஆலோசனை வழங்கினார்.

சுகாதாரம் மற்றும் கைத் தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரண அண்மையில் தேசிய மருந்து கட்டுப்பாட்டு அதிகாரசபை மற்றும் அதன் கீழ் நிர்வகிக்கப்படும் தேசிய மருந்து தர பாதுகாப்பு ஆய்வுகூடத்திற்கு திடீர் விஜயமொன்றை மேற்கொண்டார்.



தேசிய மருந்து கட்டுப்பாட்டு அதிகாரசபையில் தற்போது காணப்படும் பிரச்னைகள் தொடர்பில் அதன் தலைவர் விசேட வைத்திய நிபுணர் ஆனந்த விஜேவிக்கிரம மற்றும் தேசிய மருந்து தர பாதுகாப்பு ஆணையத்தின் பதில் பணிப்பாளர் கௌரி கத்ராராச்சி ஆகியோரால் அமைச்சருக்கு விளக்கமளிக்கப்பட்டது.

அதன் பின்னர் அவர்களுக்கு ஆலோசனை வழங்கிய அமைச்சர் ரமேஷ் பத்திரண, தேவைக்கேற்ப பணியாளர் திருத்தங்களை மேற்கொள்வதன் மூலம் அதிகாரசபையின் மனித வள மேம்பாட்டில் உரிய கவனம் செலுத்துமாறும், அதிகாரசபையின் வேலைப்பழுவுக்கு ஏற்றவாறு பதவி நிலைகளுக்கு அனுமதி வழங்குமாறும் குறிப் பிட்டார். (அ)

# ஜனவரியில் புதிய ஒரு கூட்டணி சஜித்-ஜனாதிபதி, பீரிஸ்-பிரதமர்

கொழும்பு, டிசெ. 15

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் புதிய அரசியல் கூட்டணியொன்றை அமைக்கப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எதிர்வரும் ஜனவரி மாதம் இதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் இடம்பெறும் எனத் தெரிய வருகிறது.

உருவாக்கப்படும் கூட்டணியில் ஜனாதிபதி வேட்பாளராக சஜித் பிரேமதாஸ நியமிக்கப்பட உள்ளார். குறித்த கூட்டணி வெற்றிபெற்ற பின்னர் உருவாக்கப்படும் அரசாங்கத்தில் ஜீ.எல்.பீரிஸை பிரதமராக நியமிக்க இணக்கம் காணப்பட்டுள்ளது.

இதற்கு பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகபபெரும தலைமையிலான சுதந்திர ஜனதா சபையின் சில உறுப்பினர்கள் ஆதரவளித்துள்ளனர்.

இதன் காரணமாக டலஸ் அழகப்பெரும அதிருப்தி அடைந்துள்ளதாகவும் சுதந்திர ஜனதா சபையிலிருந்து வெளியேற தயாராகி வருவதாகவும் அறிய முடிகிறது.

சுதந்திர ஜனதா சபையின் உரிமையாளரான நாலக கொடஹேவா எதிர்காலத்தில் சுதந்திர ஜனதா சபையை கலைத்துவிடுவார் அல்லது ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான கூட்டணியில் இணைந்துக்கொள்ளக் கூடும் எனவும் தெரிய வருகிறது. (அ)

# ஷானி அபேசேகரவுக்கு பாதுகாப்பு வழங்குங்கள்!



கொழும்பு, டிசெ. 15

அச்சுறுத்தலுக்கு உள்ளானார் என்று கூறப்படும் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் முன்னாள் பணிப் பா ளர் ஷானி அபேசேகரவுக்கு உடனடியாக போதிய பாதுகாப்பை வழங்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று வியாழக்கிழமை பாதுகாப்பு தரப்பினருக்கு உத்தரவிட்டது.

உயிருக்கு அச்சுறுத்தல் உள்ளதால் தமக்குப் போதிய பாதுகாப்பை வழங்குமாறு பாதுகாப்புத் துறையினருக்கு உத்தரவு பிறப்பிக்குமாறு குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர தாக்கல் செய்த எழுத்தாணை மனு விசாரணையின் போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த மனு மேன்முறையீட்டு நீதிமன்ற தலைவர் நீதிபதி நிஸங்க பந்துல கருணாரத்ன மற்றும் விக்கும் களுஆராச்சி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. (ஐ)

# விமானத்துக்குள் சிறுமி பாலியல் துஷ்பிரயோகம்

## உடன் பயணித்த இந்திய பிரஜை கைது

கொழும்பு, டிசெ, 15

சவுதி அரேபியாவின் ரியாத்தில் இருந்து கட்டு நாயக்க விமான நிலையத்தை நோக்கி வந்த சிறிலங்கன் விமானத்தில் பயணித்த இலங்கை சிறுமி பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய சம்பவம் தொடர்பாக அதே விமானத்தில் பயணித்த இந்தியப் பிரஜை விமானத்தின் பணியாளர்கள் பிடித்து, கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

நேற்று காலை 7.20 அளவில் ரியாத்தில் இருந்து கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்த சிறிலங்கன் விமானத்தில் இந்த பாலியல் துஷ்பிரயோகச் சம்பவம் நடந்துள்ளது.

சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள 49 வயதான இந்தியர் தச்சு தொழில் நிபுணர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நபர் சிறிலங்கன் விமானத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்து அங்கிருந்து வேறு விமானத்தில் இந்தியாவுக்கு புறப்பட்டுச் செல்லவிருந்தார்.

சவுதியில் தொழில் புரியும் தனது தந்தையை பார்க்க சென்று விட்டு, நாடு திரும்பிக்கொண்டிருந்த அவிசாவளை கெட்டஹெத்த பிரதேசத்தை சேர்ந்த தாயும் இரண்டு மகள்களும் இந்த விமானத்தில் பயணித்துள்ளனர்.

அப்போது அவர்களில் 9 வயதான சிறுமியை சந்தேக நபர் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கியுள்ளார்.

பாதிக்கப்பட்ட சிறுமி மற்றும் கைது செய்யப்பட்டுள்ள இந்திய பிரஜை மருத்துவப் பரிசோதனைக்காக நீர்கொழும்பு வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (அ)

# நான் கையில் கட்டிய பிரித் நூலை கழற்றி தரையில் வீசினார் அனுர!

## மிகிந்தலை விகாராதிபதி குற்றச்சாட்டு



கொழும்பு, டிசெ. 15

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க அண்மையில் ஒரு நாள் தனது விகாரைக்கு வந்தார் என மிகிந்தலை ரஜமஹா விகாரையின் விகாராதிபதி வலவாஹெங்குணுவெவே தம்மரதன தேரர் தெரிவித்தார்.

சிங்கள வலைத்தளம் ஒன்றுக்கு வழங்கிய போட்டியில் அவர் இதனை கூறியுள்ளார்.

அப்போது அவருக்கு ஆசி வழங்கி, பிரித் நூலை கட்டி விட்டு, சிறப்பாக நாட்டை ஆட்சி செய்யுமாறு ஆலோசனை வழங்கினேன்.

எனினும் விகாரையில் இருந்து வெளியேறிய அனுரகுமார, நான் அவரது கையில் கட்டிய பிரித் நூலை கழற்றி தரையில் வீசினார்.

இதனை கண்ட எனது மாணவர்களான இளம் பிக்குகள்,எனது வாகன சாரதி ஆகியோர் சம்பவம் குறித்து என்னிடம் தெரிவித்தனர்.

அவர்கள் மாயவாதிகள்,அவர்களுக்கு மதமோ, அறமோ கிடையாது அவர்களை கணக்கில் எடுக்க வேண்டாம் நான் அவர்களிடம் கூறினேன்.

அத்துடன் ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸ, மகிந்த ராஜபக்ஷ உட்பட எந்த அரசியல்வாதிகள் எனது விகாரைக்கு வந்தாலும் அவர்களை ஆசிர்வதித்து பிரித் நூலை கட்டப்போவதில்லை.

அரசியல்வாதிகள் வழங்கும் தானங்களையும் ஏற்றுக் கொள்ள போவதில்லை - என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 15.12.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட்:

# வோர்ணர் அதிரடி சதம் ஆஸி. வலுவான நிலை!

பெர்த், டிசெ. 15

டேவிட் வோர்ணர் அபாரமாக ஆடி அடித்த சதத்தின் உதவியால் பாகிஸ்தானுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியின் முதல்நாளில் அவுஸ்திரேலிய அணி வலுவான நிலையில் உள்ளது.

ஷான் மசூத் தலைமையிலான பாகிஸ்தான் கிரிக்கெட் அணி அவுஸ்திரேலியாவுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் செய்து 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது.

முதல் டெஸ்ட் போட்டி நேற்று பெர்த்தில் ஆரம்பமானது. நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

இதன்படி தொடக்க வீரர்களாக டேவிட் வோர்ணர், உஸ்மான் கவாஜா களமிறங்கினர். இருவரும் நிதானமாக விளையாடினர். தொடக்க இணை பாகிஸ்தான் அணியின் பந்து வீச்சை சிறப்பாக எதிர்கொண்டு ஓட்டங்களை சேர்த்தது.

வோர்ணர் பௌண்ட்ரிகளை விளாசினார். இதனால் அவுஸ்திரேலியாவின் ஓட்ட வேகம் அதிகரித்தது. வோர்ணர் 41 பந்துகளில் அரைச்சதம் அடித்தார். அவருக்கு உறுதுணையாக கவாஜா நிதானமாக விளையாடினார். இதனால் அவுஸ்திரேலிய அணி சிறப்பான தொடக்கத்தை பெற்றது.

மதிய உணவு இடைவேளை வரை பாகிஸ்தான் பந்து வீச்சாளர்களால் விக்கெட்டை வீழ்த்த முடியவில்லை. அவுஸ்திரேலியா விக்கெட் இழப்பின்றி 25 ஓவரில் 117 ஓட்டங்கள் எடுத்திருந்தது. வோர்ணர் 72 ஓட்டங்களுடனும் காவாஜா 37 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

மதிய உணவு இடைவேளை முடிந்து மீண்டும் ஆட்டம் தொடங்கியது. கவாஜா 41 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த லபுஷான் 16 ஓட்டங்களில் வெளியேறினார். 3ஆவது விக்கெட்டுக்கு வோர்ணருடன் ஸ்மித் இணைந்தார்.

ஒரு பக்கம் இரண்டு விக்கெட்கள் வீழ்ந்த போதிலும் மறுமுனையில் டேவிட் வோர்ணர் 125 பந்துகளில் 14 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் சதம் விளாசினார். இது அவரின் 26ஆவது டெஸ்ட் சதமாகும். இவரது சதத்தால் அவுஸ்திரேலிய தேநீர் இடைவேளை வரை 2



விக்கெட்கள் இழப்புக்கு 210 ஓட்டங்கள் சேர்த்தது.

பின்னர், தொடர்ந்த ஆட்டத்தில் ஸ்மித் 31 ஓட்டங்களுடன் வெளியேறினார். அடுத்துவந்த ட்ராவிஸ் ஹெட் வோர்ணருடன் இணைந்து சிறிது அதிரடி காட்டினார். 6 பௌண்ட்ரிகளுடன் 40 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த மிற்செல் மார்ஸ் நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

இந்த நிலையில், 16 பௌண்ட்ரிகள், 4 சிக்ஸர்களுடன் 164 ஓட்டங்களை குவித்த டேவிட் வோர்ணர் அமிர் ஜமாலின் பந்துவீச்சில் இமாம் உல் ஹக்கிடம் பிடி கொடுத்து வெளியேறினார்.

நேற்று முதல் நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தபோது அவுஸ்திரேலியா 5 விக்கெட்கள் இழப்புக்கு 346 ஓட்டங்களை எடுத்திருந்தது.

பாகிஸ்தான் சார்பில் பந்து வீசிய அமிர் ஜமால் 2 விக்கெட்களையும் ஷா அப்ரிடி, குர்ரம் சஷாட், பஹீம் அஷ்ரம் ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இன்று போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டமாகும்.

# ரசிகர்களின் அன்பாலேயே நான் மீண்டெழுந்தேன்!

**ரோஹித் சர்மா**

பெர்த், டிசெ. 15

உலகக் கிண்ணப் போட்டியில் கண்ட தோல்வியால் ஏற்பட்ட கவலையிலிருந்து ரசிகர்களின் புரிதல் மற்றும் அன்பால் தாம் மீண்டதாக இந்திய கப்டன் ரோஹித் சர்மா புதன்கிழமை கூறினார்.

கடந்த நவம்பரில் நிறைவடைந்த 13ஆவது ஒருநாள் உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்தில் இந்தியாவை வீழ்த்தி அவுஸ்திரேலியா 6ஆவது முறையாக சம்பியன் பட்டம் வென்றது. போட்டியில், இறுதி ஆட்டத்துக்கு முன்பு வரை தோல்வியே காணாமல் தொடர்ந்து 10 வெற்றிகளை பதிவு செய்த இந்தியா, நிச்சயம் கோப்பை வெல்லும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், அதற்கு நேர்மாறாக இந்தியா இறுதி ஆட்டத்தில் எளிதாக வீழ்த்தப்பட்டது ரசிகர்களுக்கு அதிர்ச்சியையும், ஏமாற்றத்தையும் அளித்தது. அணியின் கப்டன் ரோஹித் சர்மாவுக்கு அது கடைசி ஒருநாள் உலகக் கிண்ணப்போட்டியாக இருக்கலாம் என்ற நிலையில், அந்தத் தோல்வி தந்த ஏமாற்றத்தால் அவர் கண்ணீருடன் காணப்பட்டார்.

இந்நிலையில், சமூக வலைதளத்தில் வெளியிட்ட காணொலியில் இதுதொடர்பாக ரோஹித் சர்மா கூறியதாவது:

உலகக் கிண்ணப் போட்டி தோல்விக்கு பிறகு சில நாள்கள் அந்த தாக்கத்திலிருந்து எப்படி மீள்வது எனத் தெரியாமல் இருந்தேன். எனது குடும்பத்தினரும் நண்பர்களும் அந்த சூழலில் என்னை நன்றாக கவனித்துக் கொண்டனர். தோல்வி ஜீரணிக்க முடியாததாக இருந்



தாலும் வாழ்வில் அடுத்த கட்டத்துக்கு செல்ல வேண்டியுள்ளது. ஆனால் அது அவ்வளவு எளிதாக இருக்கவில்லை.

அந்த நேரத்தில் நான் சந்தித்தவர்களும், ரசிகர்களும் இந்திய அணிக்காக தாங்கள் பெருமை கொள்வதாக தெரிவித்தனர். அது எனக்கு ஆறுதல் அளிப்பதாக இருந்தது. அத்தகைய சூழலில் இதுபோன்ற வார்த்தைகள் நம்மை மேம்படுத்துகின்றன. ரசிகர்களுடன் இணைந்து நானும் அந்தத் தோல்வியிலிருந்து மீண்டேன் - என்றார்.

## காஸா மக்களுக்காக போட்டியில் கறுப்பு பட்டி அணிந்த கவாஜா

பெர்த், டிசெ. 15

அவுஸ்திரேலியா கிரிக்கெட் வீரர் உஸ்மான் கவாஜா கறுப்புநிற கைப்பட்டியை அணிந்து போட்டியில் பங்கேற்றுள்ளார்.

முன்னதாக இஸ்ரேல்- ஹமாஸ் போரில் பலியான பொதுமக்களின் இழப்பை சுட்டிக் காட்டும் வகையில் “அனைத்து உயிர்களும் சமம்” என அச்சிடப்பட்ட காலணியை அணிந்திருந்தார்.

சர்வதேச கிரிக்கெட் சபை இதில் தலையிட்டு அரசியல் மற்றும் மதரீதியான விஷயங்களை விளையாட்டு வீரர்கள் தங்களின் உடையிலோ கிரிக்கெட் பொருள்களிலோ பயன்படுத்தக்கூடாது என்கிற விதியைக் குறிப்பிட்டு தடை செய்தனர்.

விதிகளைக் கடைபிடிக்கிறேன். இருந்தபோதும் இந்த நிலைப்பாட்டை விமர்சிக்கும் வகையில் கறுப்புப் பட்டியை அணிந்திருந்துள்ளேன் - என்று கவாஜா கூறினார்.

பாகிஸ்தானில் பிறந்த கவாஜா, அவுஸ்திரேலியாவின் டெஸ்ட் தொடர் விளையாடும் முதல் இஸ்லாமியர். காஸாவில் பாதிக்கப்படும் மக்களுக்கு தனது ஆதரவை தெரிவிக்கும் முகமாக கறுப்பு பட்டையை அணிந்து தொடரின் முதல் நாள் போட்டியான பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் விளையாடினார்.

இதேநேரம், கவாஜாவுக்கு அணியின் கப்டன் பட் கம்மின்ஸ் ஆதரவை வெளிப்படுத்தினார். “அவரின் காலணியில் இருந்த வாசகமான அனைத்து உயிர்களும் சமம் என்பதை நான் ஆதரிக்கிறேன். அது பிளவுபடுத்தும் நோக்கில் அல்ல. இது குறித்து யாருக்கும் புகார் இருக்க நியாயமில்லை எனத் தெரிவித்துள்ளார். (ஐ)



## இங்கிலாந்துடனான ரி - 20 மே. இ. தீவுகள் அணி வெற்றி!



பிரிட்ஜ்டவுன், டிசெ. 15

இங்கிலாந்து அணிக்கு எதிரான முதல் இருபது- 20 கிரிக்கெட் போட்டியில் 4 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது மேற்கிந்தியத் தீவுகள் அணி.

பிரிட்ஜ்டவுனில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து 19.3 ஓவர்களில் 171 ஓட்டங்கள் சேர்த்து ஆட்டமிழந்தது. அதிகபட்சமாக பில் சால்ட் 40, ஜாஸ் பட்லர் 39 ஓட்டங்கள் சேர்த்தனர். மேற்கு இந்தியத் தீவுகள் தரப்பில் அந்த்ரே ரஸல் 3 விக்கெட்கள் வீழ்த்தினார்.

172 ஓட்டங்கள் இலக்குடன் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 18.1 ஓவரில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 172 ஓட்டங்கள் எடுத்து 4 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. அணித் தலைவர் ரோவ்மன் பவல் 15 பந்துகளில், 2 சிக்ஸர்கள், 3 பௌண்ட்ரிகளுடன் 31 ஓட்டங்களும் அந்த்ரே ரஸல் 14 பந்துகளில் 2 சிக்ஸர்கள், 2 பௌண்ட்ரிகளுடன் 29 ஓட்டங்களும் விளாசி ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

முன்னதாக பிரண்டன் கிங் 22, கைல் மேயர்ஸ் 36, ஷாய் ஹோப் 36, நிக்கோலஸ் பூரன் 13, ஷிம்ரன் ஹெட்மயர் 1, ரொமாரியோ ஷெப்பர்ட் 0 ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

இந்த வெற்றியின் மூலம் 5 போட்டிகள்கொண்ட இருபது - 20 தொடரில் மேற்கு இந்தியத் தீவுகள் அணி 1-0 என முன்னிலை வகிக்கிறது.

# இந்திய பாராளுமன்றத்தினுள் அத்துமீறி நுழைந்து எம்.பிக்கள் மீது மர்மப் பொருளை வீசிய இளைஞர்கள்!





இந்திய நாடாளுமன்றம் மீதான தாக்குதல் நடந்து 22 ஆண்டுகள் கடந்து விட்ட நிலையில், அதேநாளில் மற்றுமொரு அசம்பாவிதம் நாடாளுமன்றத்தில் நடந்துள்ளது. அத்துமீறி உள்ளே நுழைந்தவர்கள், மற்றும் வெளியே இருந்தவர்கள் இரண்டு பேர் என இந்த சம்பவத்தில் ஈடுபட்ட நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்திய மக்களவையில் நேற்று முன்தினம் அலுவல்கள் நடந்து கொண்டிருந்த போது பார்வையாளர் மாடத்தில் அமர்ந்திருந்த 2 இளைஞர்கள் திடீரென தடுப்புகளை தாண்டி அவைக்குள் குதித்தனர்.

எம்.பி.க்கள் அமர்ந்திருந்த கதிரை மற்றும் மேசைகள் மீது தாவிச் சென்ற அவர்கள் மர்மப் பொருட்களை வீசியெறிந்தனர். அதில் இருந்து வாயு வெளியேறியது. அந்த இளைஞர்கள் இருவரையும் எம்.பி.க்களே சுற்றி வளைத்துப் பிடித்து பாதுகாவலர்களிடம் ஒப்படைத்தனர்.



இதையடுத்து, நாடாளுமன்றத்தில் பதற்றம் தொற்றிக் கொண்டது. ராகுல்காந்தி உள்ளிட்ட எம்.பி.க்கள் அதிர்ச்சியோடு பார்த்துக் கொண்டு நின்றதை பார்க்க முடிந்தது. மக்களவை உடனடியாக ஒத்திவைக்கப்படுவதாக அவைத் தலைவர் அறிவித்தார்.

### 2 பேரும் உள்ளே நுழைந்தது எப்படி?

மக்களவையில் நடந்த அதிர்ச்சி சம்பவம் குறித்து செய்தியாளர்களிடம் பேசிய மக்களவை காங்கிரஸ் தலைவர் ஆதிர் ரஞ்சன் சவுத்ரி, 'பார்வையாளர் பகுதியில் இருந்து 2 இளைஞர்கள் திடீரென குதித்து உள்ளே வந்தனர். அவர்கள் ஏதோ ஒன்றை வீசினர். அதில் இருந்து வாயு வெளியேறியது.





அவர்கள் இருவரையும் எம்.பி.க்களே வளைத்துப் பிடித்தனர். பின்னர் அவர்களை, பாதுகாப்புப் படையினர் வெளியே கொண்டு வந்தனர். சபை மதியம் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.

இது நிச்சயமாக ஒரு பாதுகாப்பு அத்துமீறலாகும், ஏனென்றால் 2001ம் ஆண்டில் நடத்தப்பட்ட நாடாளுமன்றத் தாக்குதலில் தங்கள் இன்னுயிர்களை தியாகம் செய்தவர்களின் நினைவு தினத்தை இன்று அனுசரிக்கிறோம்" என்று அவர் கூறினார்.

### என்ன நடந்தது? - சு.வெங்கடேசன் விளக்கம்

இதுகுறித்து பேசிய மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் சு. வெங்கடேசன், "பார்வையாளர்கள் மாடத்தில் இருந்து முதலில் ஒருவர் தாவினார். அவர் தவறி விழுந்து விட்டதாகதான் முதலில் நினைத்தோம்.

ஆனால், அவர் எழுந்து வேகமாக நாற்காலிகளுக்கு நடுவில் ஏறிக் குதித்து ஓடினார். மற்றொரு நபர் அவையில் குதித்த பிறகுதான், இரண்டு பேர் குதித்து உள்ளே வந்திருக்கின்றனர் என்பது புரிந்தது.

அவர்களைப் பிடிப்பதற்கு முன்பாக ஷூவில் இருந்து கேஸை எடுத்து அடிக்க ஆரம்பித்துவிட்டனர். அவையில் காவலர்கள் யாரும் இல்லை. ஊழியர்கள் மட்டுமே இருந்தனர். அவர்களும் அச்சத்தில்தான் இருந்தனர். 15 நிமிடங்களுக்கு பிறகு காவலர்கள் உள்ளே வந்தனர். பாதுகாப்பு குறைபாடுதான் இதற்கு முழுக் காரணம்," என்றார்.

உள்ளே குதித்த நபர்கள் கோஷம் எழுப்பினர் என்றும் உள்ளே நடந்த களேபரத்தில் அவை தமக்குச் சரியாகக் கேட்கவில்லை என்றும் சு. வெங்கடேசன் எம்.பி. தெரிவித்தார்.



### நான்கு பேர் கைது

மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா, இந்தத் தாக்குதலில் சம்பந்தப்பட்டவர்கள் நான்கு பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிவித்தார்.

உள்ளே நுழைந்த "இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் வைத்திருந்த பொருட்களும் கையகப்படுத்தப்பட்டுள்ளன. நாடாளுமன்றத்துக்கு வெளியே இருந்த இரண்டு பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்," என்று தெரிவித்தார்.

மேலும், "மக்களவை இந்த விவகாரம் குறித்து விசாரணை நடத்தி வருகிறது. சம்பவம் தொடர்பாக காவல் துறைக்குத் தேவையான தகவல், அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. முதல் கட்ட விசாரணையில், சாதாரண புகைதான் என்பது தெரிய வந்துள்ளது. இது கவலைக்குரிய விஷயமில்லை," என்றார்.



### கைதானவர்கள் யார்?

மக்களவைக்குள் அத்துமீறி நுழைந்த இருவரும் மகாராஷ்டிரா மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் என்பது முதற் கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

அத்துமீறி நுழைந்த இருவர் கைது செய்யப்பட்ட நிலையில் நாடாளுமன்ற வளாகத்திற்கு வெளியே போராட்டத்தில் ஈடுபட்ட இரண்டு பெண்களை பொலீசார் கைது செய்துள்ளனர்.

கைதான பெண்களில் ஒருவர் பெயர் நீலம் (42 வயது) மற்றும் இன்னொருவர் பெயர் அமோல் ஷிண்டே (25 வயது) எனத் தெரியவந்துள்ளது.

'சர்வதிகாரம் கூடாது' என மக்களவைக்குள் நுழைந்த இருவரும் கோஷமிட்டதாகக் கூறப்படுகிறது.

### நாடாளுமன்றத்திற்குள் நுழைவதற்கான வழிமுறைகள் என்ன?

நாடாளுமன்றத்திற்குள் நுழைவதற்கு 4 கட்ட பாதுகாப்பு சோதனைகளை கடந்துதான் உள்ளே செல்ல முடியும்.

பாதுகாப்பு படையினரின் 3 கட்ட சோதனைக்கு பிறகே ஒருவர் பார்வையாளர்கள் அரங்கிற்குள் நுழைய முடியும்.

ஒவ்வொரு கட்டத்திலும் ஸ்கேனர் மற்றும் மெடல் டிடெக்டர் மூலம் பரிசோதனை செய்யப்படும்.

பார்வையாளர்கள் அரங்கில் நுழைவதற்கு எம்.பி ஒருவரின் பரிந்துரை கடிதம் தேவை.

நுழைவாயில் சோதனை, வரவேற்பறையில் புகைப்படம் எடுக்கப்படும்.

### இந்திய நாடாளுமன்ற தாக்குதலின் 22வது நினைவு தினம்

2001-ஆம் ஆண்டு இந்திய நாடாளுமன்ற தாக்குதல் நடந்து 22வது நினைவு தினம் அன்று கடைபிடிக்கப்பட்டது. நாடாளுமன்ற வளாகத்தில் இந்த தாக்குதலில் உயிரிழந்த 9 பேருக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த அஞ்சலி நிகழ்வில் பிரதமர் நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் அமித்ஷா,காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

பிரதமர் நரேந்திர மோடியும் துணை ஜனாதிபதி ஜக்தீப் தன்கரும் இந்த தாக்குதலில் உயிரிழந்த பாதுகாப்பு படை வீரர்களின் குடும்பத்தினரை நேரில் சந்தித்து ஆறுதல் கூறினர்.

இந்த தாக்குதலில் நாடாளுமன்றத்தில் பாதுகாப்பு பணியில் இருந்த 8 வீரர்கள் உட்பட 9 பேர் உயிரிழந்தனர்.

(15ம் பக்கம் பார்க்க)

கோ.ரகுபதி

# பெருவெள்ளத்தின் அறிவியலும் அரசியல் பொருளாதாரமும்!




தமிழகத்தில் மிக்ஜாம் புயலால் ஏற்பட்ட மழை, வெள்ளம் சென்னை உள்ளிட்ட நான்கு மாவட்ட மக்களைப் பெரும் துயரத்தில் ஆழ்த்திவிட்டது. இன்னமும் பலரால் அந்தப் பாதிப்பிலிருந்து மீள முடியவில்லை. இவ்வெள்ளத்தை 2015ஆம் ஆண்டு மழை, வெள்ளத்தோடு ஒப்பிட்டுப் பல கருத்துகள் முன்வைக்கப்படுகின்றன. 2015 பெருவெள்ளம், அதற்கு முந்தைய காலத்தில் ஏற்பட்ட வெள்ளப் பாதிப்புகளுடன் ஒப்பிடப்பட்டது. எப்போதெல்லாம் வெள்ளம் வருகிறதோ அப்போதெல்லாம் கடந்தகால வெள்ளத்தைச் சுட்டிக்காட்டுவதோடு, அதைக்காட்டிலும் கூடுதலான மழைப்பொழிவு இருந்தால், இந்நிலை ஏற்பட்டதாகப் பேசப்படுவது வழக்கம்தான்.

மழைப்பொழிவின் அளவு கூடுவதும் குறைவதும் இயற்கையானதே. இது இயற்கையின் ஓர் அங்கம். மழைப்பொழிவின் அளவு, புயல் குறித்த ஏராளமான புள்ளிவிவரங்கள், வெள்ளச் சிந்துகள், கதைகள், செய்திகள் பிரிட்டிஷ் ஆட்சிக் காலந்தொட்டே ஆவணப்படுத்தப்பட்டு வருகின்றன. மழையும் புயலும் இயற்கையானவை என்றும் இவற்றை ஒருபோதும் தடுக்க இயலாது என்றும் இந்த ஆவணங்கள் தெரிவிக்கின்றன. ஆனால், பேரிடரைத் தடுக்க இயலும். ஏனென்றால், இது அரசியல் பொருளாதாரத்தால் உருவானது. மிக்ஜாம் போன்ற பேரிடர்களின்போது எதிர்க்கட்சிகளும், முக்கியக் கலை -இலக்கிய, அரசியல் ஆளுமைகளும் ஆளும்கட்சியைக் குறைகூறுவது வழக்கம். இதற்கு ஆளும்கட்சி பதில் கூறுவதும் இயல்பே. எல்லாவற்றையும் கடந்து, மழை வெள்ளத்தைத் தேர்தல் அரசியலாகவும் அதிகாரம் சார்ந்ததாகவும் அணுகுவதற்குப் பதிலாக, அறிவியல்ரீதியாகவும் அரசியல் பொருளாதார வழியாகவும் புரிந்துகொள்வதன் மூலம்தான் வெள்ளச் சிக்கலுக்குத் தீர்வு காண இயலும்.

**தொலைந்துபோன செழுமை:**

பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் தற்போதைய சென்னை மெரினா கடற்கரையோரப் பகுதிகளில் மட்டும் சென்னை இருந்தது. அக்காலப் புள்ளிவிவரப்படி, சென்னை மாகாணத்தின் செங்கல்பட்டு மாவட்டத்தில், சைதாப்பேட்டை தாலுகாவில் அடையாளம்பட்டு முதல் விருகம்பாக்கம் வரை உள்ள சுமார் 97 கிராமங்கள், அரசியல் பொருளாதார வளர்ச்சியால் காலப்போக்கில் சென்னைப் பெருநகரமாக உருவாகின. இந்தப் பகுதிகளில் இருந்த சுமார் 43 பாக்கங்கள், 13 சே(ஏரி)கள், 2 தாங்கல்கள் எனப் பின்னொட்டைக் கொண்டிருக்கின்ற கிராமங்கள் அனைத்தும் நீராதாரம் மிகுந்த பகுதிகளாகும். இதில் வெவ்வேறு புல எண்களில் வெள்ளச்சேரியும் வேளச்சேரியும் இடம் பெற்றிருந்தன. வெள்ளச்சேரியின் பெயரைத் தவிர, அது குறித்த வேறு தகவல்களை அறிய இயலவில்லை. மீதமுள்ள பகுதிகளில் நீராதாரம் இல்லை என்று கூற இயலாது. இவை குறித்த ஆராய்ச்சி தேவை.



இப்பகுதிகளில் வீடுகளுக்கும் விவசாயத்துக்குமான நீராதாரங்களுக்காகக் கிணறு தோண்டினால், சில அடி ஆழத்தில் தண்ணீர் கிடைத்தது. நுங்கம்பாக்கத்தில் சுமார் 4 அடியிலேயே தண்ணீர் கிடைக்கும் நிலை, 1960களின் இறுதியில்கூட இருந்தது. இந்நீராதாரத்தின் விளைவால் இப்பகுதிகளில் அடர் காடுகளும் பல்லுயிரிகளும் இருந்தன. 1920களில், மாத இதழ் ஒன்றில் வெளியான தொடர் கதை, ஆதம்பாக்கம் முதல் ஈக்காட்டுத் தாங்கல் வரை அடர்ந்த காடுகளும் காட்டுப்பன்றிகளும் நிறைந்திருந்ததை விவரிக்கிறது. இதே காலங்களில் வெளியான ஒரு பத்திரிகையின் குறிப்பொன்று, கோடம்பாக்கத்துக் கத்தரிக்காயின் ருசியைப் போற்றியது. சென்னைப் புவிப்பரப்பின் இப்பண்புகளின் அடிப்படையில்,



இதைச் சங்க இலக்கியத்தின் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்திணையோடு ஒப்பிட்டு, பிரிட்டிஷ் காலத்திலேயே ஒருவர் கட்டுரை வெளியிட்டார். இவையெல்லாம் அக்காலச் சென்னையின் செழுமையைக் குறிப்பிடுகின்றன.

**வளர்ச்சியின் விலை:**

சென்னையானது, சென்னை மாகாணத்தின் தலைநகராகவும் பிரிட்டிஷ் அதிகாரத்துக்கான மையப் புள்ளியாகவும் இருந்தது. இந்நிலையில், நவீன ஆலைகள், போக்குவரத்து உருவாக்கம், பள்ளி, கல்லூரி, தொழிற்கல்வி நிலையங்கள் நிறுவுதல் போன்ற நவீன அரசியல், பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றின் காரணமாக சென்னையின் காடுகளும் வயல்வெளிகளும் நீர்த்தேக்கங்களும் நீர் வழித்தடங்களும் அழிக்கப்பட்டன. பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் தொடங்கிய இந்தப் போக்கு இன்றுவரை நீடிக்கிறது. கிராமப்புறங்களின் தற்சார்புப் பொருளாதார நிலை வலுவிழந்து, அவை நகரங்களைச் சார்ந்திருப்பதாலும், பொருளாதாரம், அதிகாரம் சார்ந்து கிராமப்புறங்களிலிருந்து சென்னைக்கு மக்கள் இடம்பெயர்வதாலும் சென்னையில் மக்கள்தொகைப் பெருக்கம் பிரிட்டிஷ் ஆட்சிக் காலந்தொட்டுப் பல்கிப் பெருகுகிறது.

இதனால் ஏற்படும் சிக்கலைத் தீர்க்க, சென்னையின் ‘புறநகர்ப் பகுதி’யும் செங்கல்பட்டு மாவட்டத்தின் தாலுகாவுமான சைதாப்பேட்டையில் மக்களைக் குடியேறச் செய்ய வேண்டுமென பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் ஆலோசித்தனர். இன்று சைதாப்பேட்டை சென்னையின் மையப் புள்ளியாக இருக்கிறது. நீர்த்தேக்கங்களிலும் நீர் வழித்தடங்களிலும் வயல்வெளிகளிலும் புறநகர்கள் விரிவாகிக்கொண்டிருக்கின்றன. மக்கள் பயன்படுத்தும் பொருள்கள் குப்பையாகக் குவிகின்றன் இவை ஏரியில் கொட்டப்படுகின்றன.

இவை நகரங்களில் பெரும் பிரச்சினைகளுக்கு வழிவகுக்கின்றன. குப்பை, சாக்கடை போன்றவற்றை மறுசுழற்சி செய்து, பொருளாதார முன்னேற்றத்துக்கு வித்திடுவது குறித்து, சென்னை வெலிங்டன் சீமாட்டி கல்லூரிப் பௌதிக கலைப் பேராசிரியர் ஈ.த.இராசேசுவரியம்மாள், பிரிட்டிஷ் காலத்தில் தொடர்ச்சியாகக் கட்டுரைகள் எழுதினார். ஆனால், சென்னையின் குப்பைகள் ஏரிகளில் கொட்டப்படுகின்றன. மக்களிடம் பொதுச் சிந்தனையில்லாத போக்கும் இயற்கை அறிவியலுக்கும் மனிதனுக்குமான உறவைப் பற்றிய புரிதலின்மையும் இதற்கான காரணங்கள். வெள்ளம் ஏற்படும்போதுதான் இந்தப் பிரச்சினையின் தீவிரம் குறித்து விவாதங்கள் எழுகின்றன.

**அரசியல்-பொருளாதார ஆக்கிரமிப்பு:**

தொடர்ச்சியான அரசியல்-பொருளாதாரச் செயல்பாடுகள், இயற்கையான நீர்த்தேக்கங்களையும் வழித்தடங்களையும் அழித்துள்ளன. சில ஏரிகள் முழுமையாக அல்லாமல், ‘மிச்ச’மாக இருக்கின்றன. சென்னையின் புவிப் பரப்பில் நீரின் இயற்கையான இடத்தை - அதாவது இயற்கை அறிவியலை - அரசியல் பொருளாதாரச் செயல்கள் ஆக்கிரமித்திருப்பதால், மழை வெள்ளத்தின் போது நீர் தேங்குகிறது. இந்நிலப்பரப்பில் பிற உயிருள்ள, உயிரற்ற பொருட்களைப் போல் மனிதனுக்கும் ஓர் இடமுண்டு என்பதே நிதர்சனம். அதாவது, இது மனிதனுக்கு மட்டுமேயானதல்ல. ஆனால், நாம் அவ்வாறு ஆக்கிக்கொண்டோம்.

இப்புவிப்பரப்பில் நீருக்கான இடம் இயற்கையானது. அதைக் கொடுக்க வேண்டியது மனிதர்களுக்கும் பிற உயிர்களுக்கும் இயற்கையின் இயக்கத்துக்கும் அவசியம். ஆக்கிரமித்த ஏரிகளையும் நீர் வழித்தடங்களையும் மீட்க வேண்டியது தவிர்க்க இயலாத தேவையாக நம்முன் நிற்கிறது. இது முற்றிலும் இயலாதுதான். ஆனால், வாய்ப்புள்ள இடங்களில் அதைச் செய்ய வேண்டும். நீர்நிலை ஆக்கிரமிப்புகளை அகற்றுவதில் சாதி, மத, வர்க்கப் பாகுபாடுகளின்றி பணிகளை மேற்கொள்ள வேண்டும். அரசுக்கு வரி செலுத்துவதால் அரசுதான் அனைத்தையும் செய்ய வேண்டும் என்ற மனநிலை இருக்கிறது. அரசின் கடமையை மறுக்க இயலாது என்றபோதிலும் மக்களுக்கும் இதில் பங்கு உண்டு.

நீர் வழித்தடங்களை ஆக்கிரமிக்கக் கூடாது என்ற நீதிமன்ற தீர்ப்பு, எந்தெந்தக் குப்பைகளை எவ்வாறு பிரித்துக் கொடுக்க வேண்டும் என்பன போன்ற அரசின் வழிகாட்டல்கள் இருப்பினும்கூட, அவற்றைப் பின்பற்றுவதில் பெருத்த அலட்சியம் நிலவுகிறது. இயற்கை அறிவியல், பேரிடர் குறித்த பாடங்களைப் பள்ளி, கல்லூரிகளில் அனைத்து நிலைகளிலும் கற்பித்தல், இவை தொடர்பான ஆராய்ச்சிகளை ஊக்குவித்தல், இது தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்துதல் போன்ற செயல்பாடுகளின் வழி இயற்கைப் பேரிடர்களை எதிர்கொள்ள இயலும். அரசு, ஆராய்ச்சியாளர், மக்கள் ஆகியோருக்கிடையே ஒரு கூட்டுச் செயல்பாட்டால் இதைச் செயல்படுத்த இயலும். ‘வெள்ளம் வரும் முன் அணை போடு’ என்ற தமிழர்களின் சொல்வழக்கு இன்றும் பொருத்தப்பாடுடையதே! ●

# இந்திய நாடாளுமன்றத்தினுள் அத்துமீறி நுழைந்து...

(14ம் பக்கத் தொடர்ச்சி)

**அவர்களது பெற்றோர் கூறுவது என்ன?**

நாடாளுமன்றத்தின் உள்ளே அத்துமீறி நுழைந்ததற்காக, கைது செய்யப்பட்ட நான்கு நபர்களை புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் விசாரித்து வருகின்றனர்.

ஏஎன்ஐ செய்தி முகமையின் தகவல்படி, பார்வையாளர் கேலரியில் இருந்து குதித்தவர்களின் பெயர்கள் சாகர் ஷர்மா மற்றும் மனோரஞ்சன்.

“அவர்களது பின்னணி குறித்து தகவல்களைச் சேகரித்து வருகிறோம். சாகர் ஷர்மா மைசூரை சேர்ந்தவர். பெங்களூருவில் உள்ள ஒரு பல்கலைக் கழகத்தில் பொறியியல் படித்து வருகிறார். மற்றொரு நபரும் மைசூரை சேர்ந்தவர்,” என்று ஒரு அதிகாரியை மேற்கோள் காட்டி ஏஎன்ஐ செய்தி வெளியிட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் குறித்து மேலும் தகவல்களைப் பெற உளவுத்துறை மற்றும் உள்ளூர் காவல்துறையின் குழு அவர்களது வீடுகளுக்கு நேரடியாகச் சென்றுள்ளதாகவும் அந்த அதிகாரி தெரிவித்திருந்தார்.

மக்களவை அரங்கில் குதித்த நபரின் பெயர் மனோரஞ்சன், மைசூரில் உள்ள மனோரஞ்சனின் தந்தை தேவராஜூ கவுடா, தனது மகனின் செயலை ‘கடுமையாகக் கண்டிக்கத்தக்கது’ என விமர்சித்துள்ளார்.

தான் விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்றும், தனது மகன் பொறியியல் படித்திருப்பதாகவும் தேவராஜூ கவுடா செய்தியாளர்களிடம் தெரிவித்தார். மனோரஞ்சன் ஹாசன் மாவட்டத்தில் உள்ள தனது கிராமத்தில் உள்ள நிலத்தில் விவசாயம் செய்து வந்ததாக அவர் கூறினார்.

“நாடாளுமன்றம் நம்முடையது. இப்படி நடந்தது கண்டிக்கத்தக்கது. நீங்கள் நாடாளுமன்றத்திற்கு வெளியே போராடலாம். ஆனால் இப்படி செய்யக்கூடாது,” என்றார்.

“நாங்கள் பிரதாப் சிம்ஹாவின் தொகுதியில் வசிக்கிறோம். மனோரஞ்சன் ஒரு நல்ல மகன். நாங்கள் அவருக்கு நல்ல பண்புகளைக் கற்றுக் கொடுத்தோம். அவர் இன்று ஏன் இப்படி செய்தார் என்று எனக்குத் தெரியவில்லை. அவர் விவேகானந்தரை நிறைய படித்துள்ளார்.

அவர் சமூகத்திற்கும், ஏழை எளிய மக்களுக்கும் நல்லது செய்ய விரும்பினார். இதை எங்கள் பகுதியில் யாரிடம் வேண்டுமானாலும் கேட்கலாம். அவரைப் பற்றி யாரும் ஒரு கெட்ட விஷயத்தைக் கூற மாட்டார்கள்,” என்று மனோரஞ்சனின் தந்தை மேலும் கூறினார்.